விலை : 20.00
பக்கங்கள் : இருபது


# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 27 சனிக்கிழமை (11.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ



யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் குடை ஆலவட்டம் சகிதம் வேந்தர், துணைவேந்தர் ஆகியோருடன் பட்டதாரிகள் அழைத்துச் செல்லப்படுவதையும் வேந்தர் மாணவர் ஒருவருக்கு பட்டம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# நல்லிணக்க முயற்சிகளை சீர்குலைக்கும் அமெரிக்கா

## பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான நல்லிணக்க முயற்சிகளை அமெரிக்கா சீர்குலைப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துபவர்களுடன் இணைந்து அமெரிக்கா செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படைத்தரப்பினரால் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் கொல்லப் பட்ட இடம் என்று புதுக்குடியிருப்பு சென்.அன்ரனீஸ் மைதானத்தை இலங்கைக்கான அமெரிக்கத் தூதர கம் அடையாளப்படுத்தியுள்ளமை குறித்து கருத்து வெளி யிடும் போதே அவர்

20-ம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு உதவிய நாடுகளை ஐ.நாவில் வெளிப்படுத்துவோம்

### அரசாங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்த நாடுகளை வெளிச் சம் போட்டுக் காட்டத் தயார் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனைக்கொண்டு ஐக்கிய நாடு கள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் பிரயோகிக்கப்படும் அழுத தங்களை எதிர்நோக்கத் தயார் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வன்னிப் போரின்போது பதி னொரு மேற்குலக நாடுகளின் ஆயு தங்கள் மீட்கப்பட்டன.

அமெரிக்க இராணுவத்தினர் பயன்படுத்தும் சமிக்ஞை கருவி கள், நோர்வேயின்செய்ம மதித் தொடர்பாடல

20-ம் பக்கம் பார்க்க

ஆயர்களை கைது செய்ய வேண்டும்
செய்திகள் பக்கம் 11

ஆவாவுக்கு கைக்குண்டு விசாரணை வேண்டும்
யாழ்.செய்திகள் பக்கம் 04

விமான நிலையத்தில் குண்டு துளைக்காத கண்ணாடி
செய்திகள் பக்கம் 16

யாழ்.பல்கலையில் பட்டமளிப்பு விழா படங்கள்
படங்கள் பக்கம் 06

சென்னையில் தோனி
விளையாட்டு பக்கம் 18

உங்களுடைய சிவனுக்கும் எங்களுக்கும் தலைவிதி ஒன்றுதான்
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17



## கூலர் வாகனம் - தனியார் வான் நேருக்கு நேர் மோதி விபத்து

### 12 பேர் படுகாயம் ; மண்டான் சந்தியில் சம்பவம்



(கரவெட்டி)

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கூலர் வாகனமும் யாழில் இருந்து பருத்தித்துறையை நோக்கி சென்று கொண்டிருந்த 750 தனியார் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர்

20-ம் பக்கம் பார்க்க

## பளைவரை 15க்குள் பரீட்சார்த்த பயணம்

(யாழ்ப்பாணம்)

வரும் 18ஆம் திகதி பளை வரை ரயில் பயணம் பரீட்சார்த்த மாக இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

வடக்கிற்கான ரயில் பயணம் எழுதுமட்டுவாள் வரை பூர்த்தியடைந்துள்ள நிலை

19-ம் பக்கம் பார்க்க

## பதவி விலக போவதில்லை பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறி வித்தால் மட்டுமேயன்றி, எப்படி யான அழுத்தங்கள் ஏற் பட்டாலும் புத்தசாசன

19-ம் பக்கம் பார்க்க

## புகைப்படத்தை மாற்றோம் - அமெ

(யாழ்ப்பாணம்)

வடக்கில், இரணப்பாலை சென்.அன்ரனீஸ் பாடசாலை மைதானத் தில் வைத்து எடுத்து டுவிட்டரில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய படத்தையும் அதன் விளக்கத்தையும் மாற்ற மாட்டோம் என்று இலங்கை யிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. போர்க்குற்ற

19-ம் பக்கம் பார்க்க

## மன்னார் ஆயர் மீது ஹெல உறுமய பாய்ச்சல்

(கொழும்பு)

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இலங்கை இராணுவத்திற்கு எதி ராக சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக் களை வன்மையாக கண்டிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சா ளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரி வித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில், மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, ஆயர்

19-ம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவின் தீர்மானத்துக்கு கூட்டமைப்பு ஆதரவு திரட்டும்

### மாவை எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவில் மார்ச் மாதம் நடை பெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கு மாறு சர்வதேச நாடுகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி க்கை விடுக்கும் என அக் கட்சியின் பின் பொதுச் செயலாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராஜா தெரிவித்துள்ளார்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயி ரிழந்தவர்களின் 40ஆவது நினைவு தின நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்ட பத்துக்கு முன்னாலுள்ள நினை வுத்தூபியில் நேற்றுக் காலை நடை பெற்ற போது அஞ்சலி செலுத்தி விட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கை யிலேயே மாவை சேனாதிராசா மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு யுத்தம் முடிவடைந்துள்ளது. ஒரே நாடு ஒரே மக்கள் என அரசாங்கம் கூறி வருகின்ற நிலையிலும் தமிழி னத்தின் அடையாளங்களை அழித்து இருப்பை கேள்விக்குறியாக்குகின்ற அரசின் நடவடிக்கைகளை நிறுத்து வதற்கு சர்வதேசம் குறிப பாக ஐ.நா.உதவ வேண்

20-ம் பக்கம் பார்க்க

## யாழ். இராணுவத் தளபதி நேற்றுப் பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கட்டளைத்தள பதியாக மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா நேற்று பதவி ஏற்றுக் கொண டார். இவ் வைபவம் நேற்று இடம்பெற்றது.

19-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## தொண்டர் தேவை

தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கும் உதவத் தயாரா? எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள். வாரத்தில் ஒரு நாள் மட்டும், நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிப் பணியாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும். காலை 9.00 - பி.ப. 1.00 இடையில் அழையுங்கள்.

(C-6158)

**021 222 8117**

**கை கொடுக்கும் நண்பர்கள்,**
இல. 104, நான்காம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


# ஆட்டோ விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு முச்சக்கர வண்டிகள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியினை சேர்ந்த நிக்ஸன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று இரவு 8.40 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-11)

# மதத்தலங்கள் அமைக்க அமைச்சின் அறிவித்தல் அவசியம்

## புத்தசாசன அமைச்சு

(கொழும்பு)

புதிதாக மதவழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் புத்தசாசனம் மற்றும் மத விவகார அமைச்சின் எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சின் செயலாளர் எம்.ஜே. பி. திஸநாயக்கவினால் இது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் கோவில்கள், விகாரைகள், மசூதிகள், தேவாலயங்கள் என எவ்வித தர நிர்ணயங்களும் இன்றியும் அனுமதியின்றியும் பலவாறாக கட்டப்பட்டுவருகின்றன.

இந்த நிலைமை மத ஒற்றுமைக் கோட்பாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தப்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கெனவே இந்த அனுமதி தொடர்பாக 2008ஆம் ஆண்டு அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையும் இந்த அறிவித்தலில் நினைவு கூரப்பட்டுள்ளது. (எ-11)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1942 - 01 - 10

உதிர்வு 2012 - 01 - 05

அமரர்
**சாந்தலிங்கம் சித்திரவேல்**
(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்)

**திதி - 11.01.2014**

எம் குடும்பத் தலைவரை பிரிந்து
ஆண்டிரண்டு ஓடிவிட்டதே

ஒளியாகி என் விழியாகி
மூச்சாகி நின்ற என் அப்பாவே
அழியாத அன்புடன்
எம்மை காத்த அப்பாவே
என்றும் உங்கள் நினைவில்

மான் பாடசாலை வீதி,
டச்சு றோட்,
உடுவில்.

அன்புடன்,
மனைவி - பவளராணி
மகன் - கிருஸ்ணானந்
மருமகள் - சுகன்யா.

(C-6161)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540


## பாராட்டி வாழ்த்துகிறோம்



**D. றெஜிக்கா** B.A (Hons)

யாழ் பல்கலைக்கழகத்தின் 29-வது பட்டமளிப்பு விழாவில் இன்று **கலைமாணி சிறப்புப்** பட்டத்தினைப் பெறுகின்ற எமது அன்ராவை மேலும் பல பட்டங்களைப் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

A. அபிஷா
A. ஸ்ரேபிகா

(6163)

## அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



எமது கல்லூரியின் முதல்வர்
திருமதி
**ஜெயலக்சுமி மாணிக்கவாசகன்**
(B.Com, Dip. In Edu., SLPS 2II)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29-வது பட்டமளிப்பு விழாவில் **முதுகல்விமாணி** பட்டம் பெற்றதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதுடன் அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று பாரினில் என்றும்சிறந்த சேவை நல்க இறையாசி வேண்டி **பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

பாடசாலைச் சமூகம்
கிளி/ விவேகானந்த வித்தியாலயம்
அம்பாள்குளம், கிளிநொச்சி.


யாழ்ப்பாண வரலாற்றில் தொடர்ந்து 4 வருடமாக குறுந்திரைப்படப் போட்டிகளை நடாத்தி வரும் AAA Movies Internationalநிறுவனத்தின்

4 வது

## 2013 AAA விருதுகளுக்கான குறுந்திரைப்பட விருது வழங்கும் விழா

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 ம் திகதி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

- குறும்படங்கள் மக்களின் வாழ்வியல், உளவியல், சமூகப் பிரச்சனைகள் என்பவற்றை மையமாக கொண்டு 5 நிமிடத்திலிருந்து 20 நிமிட கால வரையறைக்குட்பட்டதாக காணப்பட வேண்டும்.
- போட்டியில் பங்கு பற்றும் தயாரிப்பாளர்கள் தங்கள் படைப்புக்களை 31-01-2014 ம் திகதிக்கு முன்பாக AAA Movies International அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.
- சமர்ப்பிக்கும் போது பங்குபற்றும் நடிகர்கள், தொழில்நுட்ப கலைஞர்களின் விபரங்களை வழங்க வேண்டும்.
- ஒவ்வொரு குறும்படத்தையும் DVD அமைப்பில் மூன்று பிரதிகளாக வழங்க வேண்டும்.
- வழங்கப்பட்ட குறுந்திரைப்படப் பிரதிகள் திரும்ப வழங்கப்பட மாட்டாது.

AAA Award Festival

மேலும் தெரிவு செய்யப்படும் குறும் படங்கள் நேத்ரா தொலைக்காட்சியின் Film City நிகழ்ச்சியிலும் ஒளிபரப்பப்படும்.

கடந்த வருடங்களில் இக்குறுந்திரைப் படப் போட்டிகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றிகள்...

AAA Award Festival

Tel : 0213202500 82/2, K.K.S. Road, Kokuvil west, Kokuvil


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனச் சான்று

ஒரு பெரியவருக்கு அமெரிக்காவிலே ஏற்பட்ட ஓர் அனுபவம் இது. விஸ்வேஸ்வரய்யா!

ஒரு தரம் அமெரிக்கா சென்ற போது சிக்காக்கோ நகரத்தில் ஓர் ஹோட்டலில் தங்கியிருந்தார்.

இன்னும் சிறிது நாட்களில் இந்தியாவிற்கு திரும்பப் போகிறார். அதற்குள்ளே அங்கே அவருக்கு ஒரு பொருள் தேவைப்பட்டு இருக்கிறது. ஏதாவது ஒரு கடையிலே அந்தப் பொருளைச் செய்யச் சொல்லி அதற்குப் பிறகு வாங்கிக் கொண்டு வர வேண்டும். சிக்காக்கோ நகரத்திலே ஒரு குறிப்பிட்ட கடைக்குப் போனார். "இது மாதிரி... எனக்கு... இந்தப் பொருள் ஒன்று வேண்டும். அதை நீங்கள் செய்து கொடுக்க முடியுமா?" என்று கேட்டிருக்கின்றார்.

"ஓ... அதை செய்து தர முடியும்!" என்று கடை உரிமையாளர் பதிலளித்தார்.

ஒரு குறிப்பிட்ட நாளைச் சொல்லி அன்று "சாய்ந்தரம் வந்து பொருளை வாங்கிக் கொண்டு சொல்லுங்கள்" என்று சொல்லி விட்டார்.

அவர் கூறிய அந்த நாளுக்கு அடுத்த நாள் தான் இவர் இந்தியாவுக்கு புறப்பட வேண்டி இருந்தது.

அந்த விபரத்தையும் கடைக்காரரிடம் சொல்லிவிட்டார்.

"அந்தப் பொருளுக்கு எட்டு டொலர் விலை!" என்ற விபரத்தையும் கடைக்காரர் சொன்னார்.

'சரி' என்று ஒத்துக்கொண்டார் விஸ்வேஸ்வரய்யா.

"நீங்கள் செய்து கொடுக்கின்ற பொருள் எனக்கு திருப்தியாகவும் இருந்தது... அந்தக் குறிப்பிட்ட நாளிலேயும் கொடுத்து விட்டீர்கள் என்றால்... மேற்கொண்டு ஒரு டொலர் சேர்த்துக் கொடுக்கின்றேன்" என்றார்.

அதற்குப் பின்னர் வந்து விட்டார்.

கடைக்காரர் கூறிய அந்த குறிப்பிட்ட நாள் வந்தது. அன்று சாய்ந்தரம் இவர் குறித்தக் கடைக்குப் போனார். இவர் சென்ற நேரத்தில் கடைக்காரர் கடையில் இல்லை. எங்கேயோ வெளியிலே போயிருந்தார். இருந்தாலும் இவர் செய்யச் சொன்ன பொருள் தயாராக இருந்தது. அங்கே இருந்தவர்கள் அதை எடுத்து இவரிடம் கொடுத்தார்கள்.

இவர் வாங்கிப் பார்த்தார். மனதிற்குள் திருப்தியாக இருந்தது. உடனே அந்தக் கடை பணியாளரிடம், எட்டு டொலர் கொடுத்தார். அதற்குப் பின்னர் அதிகமாக ஒரு டொலரும் கொடுத்தார். ஏனென்றால் இவர் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வில்லை என்று கடைக்காரன் நினைத்துவிடக் கூடாது இல்லையா? அதனாலே!

இவர் பொருளை வாங்கிக் கொண்டு திரும்பி விட்டார்.

கடைக்காரர் வியந்துபோய், விஸ்வேஸ்வரய்யா தங்கியிருந்த விலாசத்தைக் கண்டுபிடித்து அதற்கு வந்து சேர்ந்தார்.

விஸ்வேஸ்வரய்யாவுக்கு ஆச்சரியம்!

"என்ன விடயம்?" என்று விசாரித்தார்!

"ஐயா... எங்கள் கடையிலே நீங்கள் அதிகப் படியாக ஒரு டொலர் கொடுத்து விட்டு வந்தீர்கள்! அதைத்திருப்பி கொடுத்துவிட்டுப் போகத்தான் வந்தேன்... உங்கள் விலாசத்தைக் கொடுக்காமல் வந்து விட்டீர்களே... அதனாலே பல இடங்களிலே தேடி கடைசியாக இந்த இடத்தைக் கண்டுபிடித்தேன்!" என்றார்.

"இதற்காக ஏன் இவ்வளவு சிரமப்பட்டீர்கள்... சாதாரணமாக எல்லா வியாபாரிகளும் செய்கின்ற மாதிரி இந்த ஒரு டொலரை நீங்கள் ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது? நீங்கள் சம்மதிக்கவில்லை என்றாலும் நான் உங்களுக்கு வாக்களித்த தொகை தானே அது?" என்றார் விஸ்வேஸ்வரய்யா!

"அப்படியில்லை! அந்தப் பணத்தை நான் சம்பாதிக்கவில்லை! அதனாலே எனக்கு உரிமை இல்லை என்றார்!" அவர்.

"உண்மைதான்... இருந்தாலும் நீங்கள் ஏன் அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது?" என்று கேட்டார் இவர்.

அந்தக் கடைக்காரர் தன்னுடைய நெற்றியைத் தொட்டு, "நான் அப்படிச் செய்தேன் என்றால் என்னுடைய மனஅமைதி குலைந்து விடு ம்!" என்றார்.

இதுதான் சேர் மனச்சான்று என்பது!

இன்றைக்கு நம்மிடையே எத்தனை பேருக்கு இது இருக்கிறது? யோசித்துப் பாருங்கள். இந்தக் கால வியாபாரமெல்லாம் வேறு மாதிரி.

ஒருத்தர் விமானம் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார். பயிற்சி எடுத்துக் கொண்டார். முதல் நாள் தனியாக விமானம் ஓட்டப் போகின்றார்... அதற்கு முன்னாடி ஒரு பரசூட் வாங்க வேண்டும் என்று நினைத்தார்.

உயரத்திலே பறக்கின்ற போது ஏதாவது ஆபத்து என்றால் உடனே இந்தப் பரசூட்டோடு கீழே குதித்து விடலாம். அப்படி குதிக்கின்ற போதே அதிலேயுள்ள ஒரு பட்டனைத் தட்டினால் அது குடைமாதிரி விரிந்துவிடும். அதைப்பிடித்துக் கொண்டே மெதுவாக கீழே வந்து விடலாம்.

அதனாலே இவர் என்ன செய்தார்... ஒரு கடைக்குப் சென்றார்.

"ஒரு நல்ல பரசூட் கொடுங்கள்" என்றார்.

அவர்கள் எடுத்துக் கொடுத்தார்கள். இவர் அதை வாங்கி அப்படியும் இப்படியும் நன்றாகத் திருப்பிப் பார்த்தார்.

அதற்குப் பிறகு அந்தக் கடைக்காரரை பார்த்துக் கேட்டார்.

"சேர்!... இதை வாங்கிக் கொண்டு போகிறேன்... நன்றாகப் பார்த்துக் கொடுங்கள்... ஏனென்றால்... நான் மேலே இருந்து குதிக்கின்ற போது நான் பட் னைத் தட்டும் போது இது விரியமல் போய்விட்டது என்றால் என்ன செய்வது" என்றார்.

உடனே கடைக்காரர் அவரைப் பார்த்து, "சேர்... அதைப்பற்றி நீங்கள் சற்றுக்கூட கவலைப்படாதீர்கள்... அப்படி நீங்கள் குதிக்கின்ற போது இந்தப் பரசூட் விரியவில்லை என்றால் உடனே திருப்பி எடுத்துக் கொண்டு வாருங்கள்... வேறு ஒன்று மாற்றிக் கொடுக்கின்றேன்!" என்றார் அலட்டிக்கொள்ளாமல் !

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மீனவர் பிரச்சினை தொடர்பில் மத்திய அரசு மௌனம் சாதிக்கின்றது

## வேல்முருகன் குற்றச்சாட்டு

இலங்கையில் விடுதலைப்புலிகள் முழுமையாக தோற்கடிக்கப்பட்டு வடக்கு-கிழக்கு கடலில் இருந்த மீன்பிடித் தடைகள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசே தெரிவித்து வரும் நிலையில் தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல்கள தொடர்வது ஏன்? தமிழக மீனவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய துப்பாக்கி லைசென்ஸ் வழங்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் ஆவேசமாக கூறியுள்ளார்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவதைத் தடுக்க வலியுறுத்தி வேல்முருகன் தலைமையில் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இப்போது, 300 மீனவர்கள் இலங்கையில் சிறை வைக்கப்பட்டுளனர். தமிழர் பிரச்சினையில் எப்போதும் போலவே மத்திய காங்கிரஸ அரசு மௌனமாக இருக்கிறது.

அமெரிக்காவில் இந்திய தூதரக அதிகாரி தேவயானிக்கு அவமரியாதை என்றவுடன் துடித்த மன்மோகன் சிங், தமிழக மீனவர்களை சுட்டுக்கொன்று கொண்டிருக்கும் சுண்டைக்காய் நாடு இலங்கையிடம் மண்டியிட்டுக் கிடப்பது ஏன்? தமிழக மீனவர்கள், இந்தியர்கள் இல்லையா?

இலங்கையில் விடுதலைப் புலிகள் முழுமையாக தோற்கடிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு கடலில் இருந்த மீன்பிடித் தடைகள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசே தெரிவித்து வரும் நிலையில், தமிழக மீனவர்கள் மதான இலங்கை கடறபடையின் தாக்குதல்கள் தொடர்வது ஏன்?

நட்பு நாடு என்று தம்பட்டம அடித்துக கொளளும் இலங்கையின் கடறபடை மட்டும் தமிழக மீனவரகளை சுட்டுத் தளளுகிறது.

இந்திய மீனவர்கள் மீதான தாககுதலகளை நிறுத்த வேண்டும். இல்லை என்றால், இலங்கை கடற்படையை இந்திய கடற்படை சுட்டுத தள்ளும்' என்று மன்மோகன் சிங் அறிவித்திருக்க வேண்டும்.

அதை விட்டுவிட்டு, க்ச்சதீவு பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க உரிமை இல்லை என்று கூறுவது, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களுக்கு மத்திய காங்கிரஸ் அரசு துணை போவதையே உறுதிப் படுத்துகிறது.

தாக்குதல்கள் இடம்பெறும் நாட்களையும் அதன் வீரியத்தையும் பார்க்கும் போது ஓர் உண்மை புலனாகிறது. ஈழத தமிழர இன்னல்க்ள் எப்போ தெல்லாம் தமிழகத்தில பெரய செய்தியாக வருகிற தோ, ஈழத் தமிழருக்காக எப்போதெல்லாம் தமிழ கத்தில் போராட்டங்கள் வெடிககிறதோ, ஈழத் தமிழருக்காக எப்போதெல்லாம குரல்கள் வலுப்பெறுகிறதோ அப்போதெல்லாம் தமிழக மீனவரகள், இலங்கைக் கடறபடையினரால தாக்கப்படுகிறார்கள். அதைத தடுக்காமல அந்தத் தாக்குதல்களுக்கு எலலாம் காங்கிரஸ் அரசு துணை போகிறது என்பது தான வேதனையான உணமை.

கச்சதீவை மீடக வேணடும என்று முதல்வர் ஜெயலலிதா போராடி வருகிறார். அதைத்தான் அனைத்து அரசியல கட்சிகளும் தமிழக மக்களும் வற்புறுதது கின்றன.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது. அந்தக் குரலை மழுங்கடிக்க செய்ய வேண்டும் என்பதற்காக, "இலங்கை மீனவர் களோடு தமிழக மீனவர்கள் பேச வேண்டும்.

அதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இப்போது மன்மோகன சிங் அரசு புது நாடகத்தை அரங்கேற்றி வருகிறது. தமிழக மீனவர்களை இலங்கை கடற்படைதான் தாககுகிறது.

இலங்கை மீனவர்கள் தாக்க வில்லை. இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையே எந்த மோதலும் இல்லை. இரு நாடுகளும் தீர்க்க வேணடிய பிரச்சினையை, ஒரு மாநில அரசிடம தள்ளி விடுவது மத்திய அரசுக்கு அழகாகுமா?

இலங்கை கடற்படையை கட்டுப்படுத்தும் அதிகாரம் இரு நாட்டு மீனவர்களுக்குக் கிடையாது என்பது மன்மோகன் சிங் அரசுக்குத் தெரயாதா? தமிழக அரசு சொன்னால, இலங்கை கடற்படை கேட்குமா? என கேள்வியெழுப்பினர். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 60 | 80 |
| தக்காளி | 70 | 60 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 40 |
| கரட் | 40 | 40 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80-100 | 180 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 80 | 140 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 20 | 40 | 40 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 70 | 70 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 | 140 |
| போஞ்சி | 70 | 60 | 90 | 70 |
| கத்தரி தம்புள்ள | 50 | 60 | - | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 40 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 | 120 |

# இராசி பலன்

**11.01.2014**
**(மார்கழி 27, சனிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு**
**இராகுகாலம் 09.33-11.03 மணிவரை**
**சுபநேரம் 03.33 -05.03 மணிவரை**
**ஏகாதசி 3.57 பின்னிரவு**
**கார்த்திகை 4.54 பின்னிரவு**
**கார்த்திகை விரதம்**

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.

**இடபம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழும் நாள்.

**மிதுனம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தொல்லை தந்தவர்களே தோள்கொடுத்து உதவ முன்வருவர்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திருடர் பயமுண்டு, எதிர்பாராத மனஸ்தாபங்களால் மனதில் உற்சாகம் குறையும், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி** பயணங்களால் பலனுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பொருளாதாரநிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான நாள், அபூர்வ சந்திப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்** நோய்கள் குணமடையும், விருந்தினர் வருகையுண்டு, கனிந்த தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு, பூர்வபுண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களால் நன்மையுண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

**கும்பம்** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், கோரிக்கைகள் நிறைவேறலாம்.

**மீனம்** வார்த்தைகளால் வளம் காணும் நாள், திட்டமிட்ட காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், கனவுப்பலிதமுண்டு, போசன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு.

**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் ஆலயத்தில் தேசிய தைப்பொங்கல் விழா

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சும் யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து தேசிய தைப்பொங்கல் விழாவை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.


தைப்பொங்கல் விழா எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாண யக்கார பிரதம விருந்தினராக கலந்து கொள்




வதோடு விசேட விருந்தினராக பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித் துவப்படுத்துகின்ற சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதேச நகரசபை தலைவர்கள், சமயத்தலைவர்கள், பிரதேச சபை தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் பலர் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடை பெறவுள்ளதோடு தமிழர்களின் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகள் நடை பெறவுள்ளன என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஒருங்கி ணைப்பு செயலாளர் கலாநிதி சி.மோகன் அறிவித்துள்ளார். (அ)




# ஆவா குழுவுக்கு கிடைத்த கைக்குண்டு தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்

## கோருகிறது கூட்டமைப்பு

யாழ்.குடாநாட்டில் சட்டம் ஒழுங்கை கேள்விகது உள்ளாக்கியிருக்கும் வன்முறைக் கும்பல்களின்மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரியிருக்கும் த.தே.கூட்டமைப்பு, இவ்வாறான கும்பல்கள் நடத்தியிருந்த சம்பவங்கள் தொடர்பில் முழு மையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

குடாநாட்டில் பல வன்செயல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடை யவர்கள் என சந்தேகிக்கப்படும் "ஆவா" கும்பல் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்களை அச்சத்திற்கு உள்ளாக்கும் எந்தவொரு தரப்பிற்கும் தமிழர் தாயகத்தில் இடமில்லை என்பதே தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் நிலைப்பாடாகும். இதன் காரண மாகவே நாம் தொடர்ச்சியாக படையினரின் வெளியேற்றத்தை கோரி வருகின்றோம்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்ன தாக, யாழ்.மாவட்டத்தில் பல வன்முறைச் சம்பவங்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்க ளுடன் தொடர்புடையவர்கள் என 10 வரை யான இளைர்கள் மரணத்தை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் கைக் குண்டுகளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறான கும்பல்கள் யாழ்.குடாநாட்டில் பல சந்தர்ப்பங்களில் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருந் தமை மக்களால் பல தடவைகள் கூறப்பட்டிரு க்கின்றது.

மேலும இவ்வாறான கும்பல்கள் குடா நாட்டின் நகரப் பகுதிகளில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும் உள்ளதாக அறிகின் றோம். எனவே மக்களுடைய இயல்பு வாழ்க் கைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளும் குழுக்கள் சட்டத்தினால் தண்டிக்கப்பட வேண்டும்.

இதேபோன்று இவ்வாறான குழுக்களிடம் எவ்வாறு போரில் ஈடுபடும் தரப்புக்கள் பயன்படுத்தும் கைக்குண்டுகள் கிடைக்கப் பெற்றன என்பது தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இதேபோன்று மரணத்தை உண்டாக் கும் வகையிலான வாள்கள், கத்திகளை என்ன நோக்கத்திற்காக அவர்கள் வைத்திரு ந்தார்கள் என்பதும் ஆராயப்பட வேண்டும்.


இன்று மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத் தும் இவ்வாறான கும்பல்கள் எதிர்காலத்தில் அவர்களிடமுள்ள அபாயகரமான ஆயுதங் களால் அரசியல் பிரமுகர்களுக்கும் கூட ஆபத்து விளைவிக்க முடியும்.

எனவே குடாநாட்டில் இயல்பு வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கும் எந்த தரப்புக்களு க்கும் இடமில்லை. அவ்வாறனவர்கள் சட் டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தண்டவாளங்களை கடத்திய பாரவூர்தி பொலிஸார் வசம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் சட்ட விரோதமாக தண்டவாளங்களை ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்ட பாரவூர்தியை சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர்.



இச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, சாவகச்சேரி நுணாவில் கிழ க்கு கந்தசுவாமி ஆலயத்துக்கு முன் பாகவுள்ள வெற்றுக் காணியில் அரசுடைமையான தண்டவாளங்கள் கிடந்த நிலையில் அவற்றை சில நபர்கள் பாரவூர்தியை ஏற்றிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

அவ்வேளை பாரவூர்தி மணலுக்குள் புதையுண்டதனால் கொண்டு செல்ல முடியாது நின்ற போது அவ்விடத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

பாரவூர்தியினுள் தண்டவாளங்களை இட்டு பழைய தகரங்களால் அவை மறைக்கப் பட்டிருந்தன. பொலிஸாரைக் கண்டதும் அவ்விடத்தில் நின்றவர்கள் தப்பியோடி விட்டனர். சாரதி மட்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரவூர்தியையும் சாரதியையும் பொலிஸார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-29)

# நாடகப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் நடத்தப்பட்டு வருகின்ற நாடகப் பயிற்சி நெறியின் புதிய பிரிவு விரைவில் ஆரம்பமாகவுள்ளதால் இப் பிரிவில் இணை ந்து பயில்வதற்கு ஆண், பெண் இருபாலா ரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

நாடகமும் அரங்கியலும் தொடர்பான அனைத்துப் பரிமாணங்களையும் உள்ள டக்கியதாக அமையும் இப் பயிற்சி நெறிக்கு 16 வயதுக்கு மேற்பட்ட நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், அரங்கு தொடர் பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களும், நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவ ர்களும் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்.திரும றைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ண ப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை க்கு முன்பாக பிரதி இயக்குநர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பா ணம். என்னும் முகவரிக்கு நேரிலோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வேண்ட ப்படுகின்றார்கள். (அ)

# சமகால இலக்கியம் பற்றிய கலந்துரையாடல்

(மானிப்பாய்)

யாழ் இலக்கிய குவியத்தின் ஏற்பாட்டில் சமகால இலக்கியம் பற்றிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருமறைக் கலாமன்ற தமிழ்த்தூது அழகியல் கல்லூரி வளாகத்தில் இடம்பெற வுள்ளது.

இதில் நிலாந்தன் இணையத்தில் தமிழில் எழுதுபவர்களின் அற உணர்ச்சி பற்றிய **இணையத்தமிழ் அறம்** என்னும் தலைப் பிலும் கருணாகரன் ஈழத்தின் இலக்கிய செயற்பாட்டு முயற்சிகள் பற்றியும் இன்றைய தமிழ் படைப்புகள் பற்றியும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இவர்களின் அறிமுகத்துடன் இக் கலந்து ரையாடல் ஆரம்பித்து வைக்கப்பட்டு பின்னர் இலக்கியம் பற்றிய போக்கையும் சமகால இலக்கிய ஆளுமைகள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களுக்கிடையிலான நட்பை வளர்க்கும படியும் கலந்துரையாடல் அமையவுள்ளது.

ஆர்வமுள்ள அனைத்து இலக்கிய ஆர் வலர்களையும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-23)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 3.30 மணிவரை பண்டத்தரிப்பு, இளவாலை, சுழிபுரம், வடலியடைப்பு, மாதகல் முழுவதும் ஜம்புகோளப்பட்டினம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி ஏற்பட மனித வாழ்வை மேம்படுத்த வேண்டும்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஊதி பெருப்பித்த பொருளாதார அபிவிருத்தியையே மக்களுக்கு முன் வைததுள்ளது எனவும் இந்த பொருளாதாரம் குறுகிய காலத்தில் வீழ்ச்சிய டைந்து விடும் எனவும் ஜே.வி.பியின் நாடா ளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநா யக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் பொய்யான புள்ளிவிபரங்களை முன் வைதது அபிவிருத்தி என்ற மாயையை காட்டி வருகிறது. எனினும் மக்களால் உண்மை யான பொருளாதார பிரதி பலன்களை அனுப விக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் மனிதவளத்தை மேம்படுத்த வேண்டும். அத்துடன் காலத்தி ற்கு ஏற்ற வகையில் பொருளாதாரத்தை மேம் படுத்த வேண்டும்.

மனித வளத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் போதுமான நிதியை ஒதுக்க வேண்டும். அத்துடன் இவற்றை மனிதர்களின் அடிப்படை யான தேவை என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ளடக்க வேண்டும்.

பிள்ளைகளின் கல்வி பெறும் உரி மையை அரசாங்கம் மீறும் போது அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். மக்களுக்கு சுகா தார வசதிகள் கிடைக்காது போனால் அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் உரிமை இருக்க வேண்டும்.

அரசாங்கத்திற்கு மனித வளம் தேவைப்ப டவில்லை என்பதால் கல்வி மற்றும் சுகாதா ரத்திற்கு ஒதுக்கும் நிதியை குறைத்து வரு கிறது.

ராஜபக்ஷ அரசாங்கத்திறகு தேவை மனித வளம் அல்ல. தமது சுற்றுலா தொழில் துறை க்கான பீச் போய்ஸ், சுற்றுலா வழிகாட் டிகளே அவர்களு க்கு தேவைப்படுகிறது.

இப்படியான பொருளாதார மாயையே அவர்களுக்கு உள்ளது. பசில் ரா பக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ என அனைவரும் சுற்றுலா விடுதிகளை நிர்மா ணித்து வருகின்றனர். இவர்கள் சுற்றுலா பொருளாதாரத்தை இலக்கு வைத்து இதனை மேற்கொண்டு வருகின்றனர் என்றார். (அ-2)


உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கையான ஒரு நண்பர் தேவையா?

மு.ப. 9.00-பி.ப. 1.00 வரை அழையுங்கள்

021 222 8117

கைகொடுக்கும் நண்பர்கள் (இரகசியம் பேணப்படும்)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து; நட்சத்திரம்: பூராடம் 4; கி.பா: 16 ¾ உயரம்: 5'6"; தகைமை/தொழில்: பட்டய கணக்குகள் / பிரதம உள்ளக கணக்காய்வாளர்; தொ.இ: B/922 | பிறப்பு: 1988 இந்து; நட்சத்திரம்: பரணி; கி.பா: 33 செவ் 4 இல்; உயரம்: 5'2"; தகைமை/தொழில்: A/L, Dip. in Preschool; தொ.இ: G/1315 |
| பிறப்பு: 1975 இந்து; நட்சத்திரம்: அச்சுவினி 3; கி.பா: 52 செவ் 1 இல்; உயரம்: 5'1"; தகைமை/தொழில்: A/L / கட்டட ஒப்பந்தகாரர் (பிரான்ஸ் Not PR); தொ.இ: B/924 | பிறப்பு: 1979; நட்சத்திரம்: சதயம்; உயரம்: 5'4"; தகைமை/தொழில்: BA / ஆசிரியர்; தொ.இ: G/1316 |
| பிறப்பு: 1987 இந்து; நட்சத்திரம்: மிருகசீரிடம் 1; கி.பா: 19 ¼; உயரம்: 5'5"; தகைமை/தொழில்: O/L / வரவேற்பாளர் (சவுதி); தொ.இ: B/925 | பிறப்பு: 1967 இந்து; நட்சத்திரம்: ரேவதி 1; கி.பா: 18; உயரம்: 5'3"; தகைமை/தொழில்: O/L; தொ.இ: G/1317 |
| பிறப்பு: 1985 இந்து; நட்சத்திரம்: மிருகசீரிடம் 2; கி.பா: 45 ¼; உயரம்: 5'10"; தகைமை/தொழில்: A/L / சிற்ப வேலை; தொ.இ: B/927 | பிறப்பு: 1972 இந்து; நட்சத்திரம்: கேட்டை; கி.பா: 29; உயரம்: 5'2"; தகைமை/தொழில்: A/L / பத்திரிகை நிறுவனம்; தொ.இ: G/1319 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



# உலக வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்

காலம்:- 2014 ஜனவரி 17 ஆம் திகதியில் இருந்து 19 ஆம் திகதி வரை

இடம்:- யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கம்.

தொழில் வழிகாட்டல் பயிற்சி முகாம் நடத்துநர் CIOB இலங்கை கட்டடக்கலை நிறுவனம். இக் கைத்தொழில் வழிகாட்டல் தொழிற் பயிற்சி முகாமானது 04 வருடங்களாக வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. நடைபெறும் பயிற்சிகள் பின்வருமாறு.

- வர்ணம் பூசுதல்
- கூரை வேலை
- அசமோனிய ஓட்டு வேலை

------- பங்கு பற்றுவதற்கான முன் பதிவு இலவசம் அனுமதி இலவசம்-------

பங்கு பற்றும் அனைவருக்கும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இடம்:- இலங்கை கட்டடக்கலை நிறுவன மண்டபம்

திகதி:- 17-19 ஆம் திகதி, ஜனவரி, 2014

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ள

Ceylon Institute of Builders

CIOB Institute for Building Professionals Established - 1961

உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்ப்பாணம்.

தொ.இல.:- 021 222 2526

(5287)



# உளம் கனிந்த பாராட்டுக்கள்



தவராசா நிதர்சன்

யாழ். பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் பொது கலை மாணி (B.A) பட்டத்தினைப் பெறுவதனையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

மாமா அமிர்தலிங்கம் (சுவிஸ்)

மாமி ரஜனி (சுவிஸ்)

அர்ச்சிகா, ஜனனி (மச்சாள்மார், சுவிஸ்)

(மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார்)

தகவல்:- சித்தப்பா M.சுந்தரலிங்கம் மிருசுவில் வடக்கு

(5288)



# தென்னிந்திய யாத்திரை

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000ம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன்கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

இது தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய மூன்று மாநிலங்களுக்கூடான யாத்திரை.

நாட்கள் 12 யாத்திரீகர்கள் 10 பேர் ஆரம்பம் 07.02.2014 நிறைவு : 19.02.2014

தரிசிக்கும் ஆலயங்கள் : காஞ்சி காமாட்சி, ஏகாம்பரேஸ்வரர், ஐயப்பசுவாமி, வரதராஜப்பெருமாள், மேல்மருவத்தூர், பிரம்மாகோவில், வேளாங்கண்ணி, திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்கா, திருச்செந்தூர், அழகர்கோவில், மதுரைமீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரம்குன்றம், பழனி, மலைக்கோட்டைவினாயகர், சென்னைசீரடிபாபா, மாங்காடுமாரிஅம்மன், திருவேற்காடுகருமாரிஅம்மன், இராமேஸ்வரம், நவபாஷாணம், தஞ்சாவூர், கூடலளகர்பெருமாள், மதனகோபாலசுவாமி, கறுப்புசுவாமி, பழமுதிர்சோலை, சந்திரன்திங்களூர் சுவாமிமலை, ஸ்ரீரெங்கம், திருவானைக்காவல், வடபழனி, கபாலீஸ்வரர், பார்த்தசாரதி, காளகஸ்திரி, வேலூர்பொற்கோவில், திருவெண்ணாமலை, கிரிவலம், ரமணமகாரிஷிஆச்சிரமம், சிதம்பரம், வைத்தீஸ்வரன்கோவில், திருவெண்காடுபுதன், கீழ்பெரும்பள்ளம்கேது, திருக்கடையூர்அபிராமி, திருநள்ளாறுசனிபகவான், அனந்தமங்களம் ஆஞ்சிநேயர், கோபாலகிருஷ்ணர், சூரியன்கஞ்சனூர், சுக்கிரன் ஆலங்குடிவியாழன், திருநாகேஸ்வரம்ராகு, உப்பிலியப்பன் மேற்குறிப்பிட்ட ஆலயங்கள் அனைத்தையும் தவறாது தரிசிக்கலாம். அத்துடன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் தேவாரம் பாடிய திருத்தலங்களையும் தரிசிக்கலாம். தரிசனம் முடித்துவரும் நேரத்தை பொறுத்து மிகுதி ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை :

இருவழி விமான டிக்கட், மூன்று வேளை உணவு, காலை காப்பி பலகாரம், மத்தியானம் சுத்தமான சைவ உணவு சாதம், 4 மணிக்கு காப்பி, ரீ - இரவு காப்பி பலகாரம் யாத்திரை முடியும் வரை A.C. வாகன வசதி தங்குமிடங்கள் 2 பேருக்கு கட்டில் மெத்தை, சுடு தண்ணீர் உடன் கூடிய (குளியல் அறையுடன் கூடிய ரூம்கள்) எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள். நாள் ஒன்றிற்கு ஒவ்வொருவருக்கும் 1 லீற்றர் மினரல் வாட்டர். இவை அனைத்தும் எமது சேவை.

கட்டண விபரம் கேட்டு அறிந்துகொள்க!

## கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்

Office : City Center Shopping Complex, 3rd Floor, No. 59,C 3/3, Sea Street, Colombo - 11.

Tel : 0777 680102, 0724 - 222989 Web : www.sridevipilgrims.com

(சி/6156)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

படங்கள்:
எஸ்.ஆர்.கரன்

































**யாழ்ப்பாணப்** பல்கலைக்கழகத்தின் **29**ஆவது பொதுப் பட்டமளிப்பு **விழா** நேற்றைய தினம் கோலாகலமாக ஆரம்பமானது. இன்றும் இரண்டாவது நாளாக பட்டமளிப்பு விழா இடம் பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளை மீறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடம்

## விக்ரமபாகு கருணாரட்ண தெரிவிப்பு



**ஆசியாவின் இன அழிப்பு நாடாக இலங்கை மாறியுள்ளது. மனித உரிமை மீறும் நாடுகளில் இலங்கையும் முக்கிய நாடாக உள்ளதென அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.**

மேலும், மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஜனாதிபதியின் விஜயத்தின் பின்னரே இலங்கையில் போதைப் பொருட்கள் பரவுகின்றதெனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் அமைப்பினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட கருத்து முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிக்கையில்,

ஆசியாவின் மிகவும் மோசமான நாடாகவும், ஆசியாவில் இன அழிப்பை மேற்கொள்ளும் நாடாகவும் இலங்கையே காணப்படுகின்றது. இலங்கையில வட மாகாணத்தில் மண்ணைத் தோணடினால் மனித எலும்புகளும், மனித எச்சங்களுமே உள்ளன.

இவ்வாறான மிக மோசமான இன அழிப்பினை இலங்கை இராணுவமும், அரசாங்கமும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது செய்துள்ளன.

மனித உரிமைகளை மீறும் நாடுகளின் பட்டியலில் இன்று அனைத்து நாடுகளும் இலங்கையினையே முன்னிலைப்படுத்துகின்றன.

அமைதியான, இயற்கை அழகும், உல்லாசத்துறை வளர்ச்சியும் மேலோங்கியிருந்த இலங்கை இனறு சிறுவர் மற்றும் பெண்களை துஷ்பிரயோகம் செய்யும், கொலை, கொள்ளை போதைப் பொருள் வர்த்தகத்தில் வளர்ச்சி கண்ட நாடாக மாற்றப்பட்டுவிட்டது.

இவை இறுதி சில ஆண்டுகளிலேயே இடம்பெற்றுள்ளது. குறிப்பாக யுத்தத்திற்கு பின்னரான இலங்கை மிகவும் மோசமான கலாசாரச் சரழிவான நாடாகவும் இலங்கையின் மிகவும் மோசமான அரசாங்கமான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் மாறியுள்ளது.

மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டின் பின்னர் இவை அனைத்திற்குமான நிரந்தரத் தீர்வினையே இலங்கையின் அனைத்து மக்களும் எதிர்பார்க்கின்றனர். எனவே அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# குறும்படங்கள் வெளியீடு

நல்லூரான் கலைத்தாய் மன்றம் நடத்தும் விமல்ராஜின் பிஞ்சு மனசு, திரும்பிப்பார், தோள் கொடு ஆகிய குறுந்திரைப்படங்களின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். யோகா அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் முதன்மைவிருந்தினராக வடமாகாண திரைப்படச் சங்கத்தின் தலைவர் என். கேசவராஜன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் எம்.முரளிதரன், அகில இலங்கை கலை இலக்கியச் சங்கத் தலைவர் பொன்.சுகந்தன், நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் நா. வன்னியசிங்கம், வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவலகத் திணைக்கள கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.அற்புதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் ஆசியுரையை யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத் சைதன்ய சுவாமிகள் ஆற்றவுள்ளார்.

நூலின் வெளியீட்டுரையை யாழ். இலக்கிய குவியத்தின் தலைவர் வேலணையூர்தாஸ் நிகழ்த்த முதற்பிரதியை யாழ். மத்தி சத்தியசாயி சேவா நிலையத் தலைவர் சி.சிவபாலன் சிறப்புப் பிரதியை ஜெ.கெ.சொரூபன் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ-9)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 6 ஆவது வருடாந்த இரத்ததான முகாம் நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்புகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் குருதிக் கொடையாளர்கள் அனைவருக்கும் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ)


# விமானப் படைத் தளபதியாக கோலித குணதிலக்க

இலங்கை விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் கோலித குணதிலக்க நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி முதல் இந்த நியமனம் அமுலுக்கு வரும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான கோலித குணதிலக்க விமானப்படையின் தலைமை பண்டை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். (அ-2)





யா/ சிறுப்பிட்டி அ.த.க .பாடசாலை பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தங்கம் கடத்திய நபர் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து 600 கிராம் தங்கமகடத்திச் சென்ற நபரொருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். ஆந்திராவைச் சேர்ந்த பிரசாத் ராவ் என்பவர் இலங்கையில் இருந்து 18 இலட்சம் ரூபாய் ( இந்தியன் ரூபாய்) மதிப்பிலான தங்கத்தை கடத்தி கொண்டு வந்துள்ளார்.

அவரிடம் சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் அவர் தங்கம் கடத்தியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. (அ-2)

# வேலணை கல்விவலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

தீவகக்கல்விவலயத்தில்மீளத் திறக்கப்படவுள்ள காரைநகர் ஆயுலி சிவஞானோதய வித்தியாலத்திற்கு அதிபர் பதவி வெற்றிடம் கோரப்பட்டுள்ளதாக தீவக வேலணை வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். இவ் வெற்றிடத்திற்கு தீவகக்கல்வி வலயத்திற்குட்பட்ட இலங்கை அதிபர் சேவை வகுப்பு-III ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இனைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு-I, 2-I இனைச் சேர்ந்தவர்கள் விண்ணப் பிக்கலாம். இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு-I, 2-I இனைச் சேர்ந்த வர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் இலங்கை ஆசிரியர் சேவைவகுப்பு-2-II இணைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பத்தினை தீவகக்கல்வி வலயத்தின் நிர்வாகப் பிரிவில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண கூடுதல் அவகாசம் வேண்டும்-மஹிந்த

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண கூடுதல் அவகாசம் தேவைப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இஸ்ரேல் நாட்டுக்கு சுற்றுப்பயணம் சென்றார். அங்கு அவர், இஸ்ரேல் நாட்டு பிரதமர் ஷிமோன் பெர்ஸ்ஸுடன் இணைந்து கூட்டாக செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது,

தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இலங்கை வடபகுதியில் அரசு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இலங்கை அரசு எப்போதும் அமைதியை ஆதரிக்கிறது. அனைத்து மக்களும் அமைதியாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகிறது.

தீவிரவாதிகளுக்கு எதிராக 30 ஆண்டுகளாக இலங்கையில் போர் நடை பெற்றது. இதனால் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியும் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது.

ஆனால் தற்போதோ கடந்த 4 ஆண்டுகளாக இலங்கையில் அமைதி நிலவுகிறது. 2009ஆம் ஆண்டில் தீவிரவாதத்தை பூண்டோடு இலங்கை ஒழித்து விட்டது.

தீவிரவாதத்தை ஒழித்து விட்ட போதிலும், தற்போது சர்வதேச நாடுகளின் நிர்ப்பந்தத்தை இலங்கை சந்தித்து வருகிறது.

போர்க்குற்றம், மனித உரிமை விவகாரத்தில் இலங்கை மீது குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண, இலங்கைக்கு கூடுதல் கால அவகாசம் தேவைப்படுகிறது.

ஆண்டுதோறும் மார்ச் மாதம் அல்லது 6 மாதங்களுக்கு ஒருமுறை ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக மேலை நாடுகள் தீர்மானம் கொண்டு வருகின்றன.

இதனால் அந்த நாடுகளுடன் இலங்கை மோதல் போக்கை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது.

இலங்கை வடபகுதியில், புதிதாக புகையிரத கடவைகள், வீதிகள், மின்சார வசதி, தண்ணீர் வசதி, மருத்துவ மனைகள், பாடசாலைகள் அமைத்திருக்கிறோம். இதற்காக 400 மில்லியன் டொலர்களை எங்களது அரசு செலவழித்திருக்கிறது.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், இலங்கையின் வடபகுதியை பொருளாதார ரீதியில் முன்னேற்றியிருப்பதோடு, சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப்புலிகள் 14 ஆயிரம் பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ்துறையில் தமிழர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களும் பங்கேற்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


கண்ணீர் அஞ்சலி



அமரர் ஐயாத்துரை பாஸ்கரன்


எமது கல்லூரியில் 20 வருடங்களுக்கு மேலாக உயிரியல் கற்பித்தது மட்டுமல்லாது கல்லூரியின் நலனிலும் மேம்பாட்டிலும் அக்கறை கொண்டு எம்முடன் சேர்ந்து பணியாற்றிய ஆசான் ஐயாத்துரை பாஸ்கரன் அவர்களது மறைவு ஆற்றொணாத் துயர் தருகின்றது. அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கு கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(சி-6159)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைமைகளை இஷ்டத்திற்கு கீறிப்பார்க்கும் இனவாத அரசியல்வாதிகள் !



யாழ்ப்பாணத்தில் சில நாட்களுக்கு முன்னர் நடந்த சிறுவர் மாதிரிக் கிராமத் திறப்பு விழா வில், முதல் முறையாக வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன், மத்திய அமைச்சர்கள் பங் கேற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தார்.

அங்கு அவர் வெளியிட்ட கருத்து குறித்து சிங்களத் தேசியவாதிகளால்திரிவுபடுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் தனது உரை யில் முதலில் மாகாண சபைகளின் அதிகாரங்களை விரிவுபடுத்த வேண்டும் என்றும், ஒற்றையாட்சி முறையைக் கைவிடும் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற அரசாங்கம் கூறிவரும் கருத்தை நிராகரிக்கும் வகையில் அவரது கருத்து அமைந்திருந்தது. "ஒரே தேசம் ஒரே மக்கள் என்றெல்லாம் மேடைக்கு மேடை கூக்குரல் எழுப்புவதில் பயனில்லை. ஏனென்றால் இது ஒரே தேசமாக இருககும் அதே நேரத்தில், வெவ்வேறு பின்புலங்களைக் கொண்ட மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும். ஒரே நாட்டில் வாழ்வதால் நாங்கள் ஒரே மக்களாகிவிட முடியாது. நாம் யாவரும் ஒரு நாட்டு மக்களே என்று பெருவாரியான பெரும்பான்மையின மக்கள் கூறும் போது, இது சிங்கள பௌத்த நாடு, எல்லோரும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினரின் கட்டுப்பாட்டின் கீழடங்கிய இந்நாட்டின் குடிமக்களே என்ற அடிபபடை எண்ணத்தில் தான் தமது கருத்தை வெளியிடுகின்றார்கள். இது தவறு என்று அவர்கள் எண்ணுவதில்லை" என்று அதற்கு விளக்கமும் கொடுத்திருந்தார்.

ஆனால், அரசியலமைப்பை மாற்றி ஒற்றையாட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டதை, சிங்கள பௌத்த தேசியவாத அமைப்புகள் சில அவர் நாட்டைப் பிரிக்க முனைவதாக அர்த்தம் கற்பிக்க முனைந்துள்ளன.

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்ற பின்னர், இந்தளவுக்கு மோசமான நிலைக்குப் பின்தள்ளபபட்டதற்கு, இதுபோன்ற தவறான புரிதல்களோ அல்லது திரிபுபடுத்தல்களோ தான் முக்கியமான காரணம்.

சிங்கள மக்களிடத்தில் தமிழர்களுக்கு எதிரான கருத்தை விதைப்பதன் மூலம், அரசியல் ஆதாயம் தேடுகின்ற பண்பு, கொழும்பு அரசியலில் புதியதொன்று அல்ல. விடுதலைப் புலிகள் இயக்கம் பலமாக இருந்தவரை, இதுபோன்ற மோசமான கருத்துகளை விதைபபது சிங்களத் தேசியவாத சக்திகளுக்கு மிகவும் இலகுவானதாகவும் இருந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், விடுதலைப்புலிகளை வைத்து நடத்தப்பட்ட இனவாத அரசியல் முடிவுக்கு வந்து விடும் என்று சில தரப்பினர் எதிர்பார்த்த போதிலும், அது தவறான கணிப்பாகவே இன்று வரை இருந்து கொண்டிருக்கிறது.

அதற்கு ஓர் உதாரணம் தான், வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் ஒற்றையாட்சிக்கு எதிரான கருத்து, பிரிவினைக்கு ஆதரவான கருத்தாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

உலகில் ஒற்றையாட்சி முறை, சமஸ்டி ஆட்சிமுறை, மன்னராட்சி முறை என்று பல்வேறு விதமான ஆட்சி முறைகள் உள்ளன. இதில் **ஒற்றையாட்சி முறையை மாற்றியமைக்க வேண்டும்** என்பதே வடக்கு மாகாண முதல்வரின் கருத்தாக இருந்தது.

ஒற்றையாட்சி முறை ஒழிக்கபபட்டு, சமஸ்டி ஆட்சிமுறை உருவாககப்பட்டால், தனிநாட்டை இலகுவாக உருவாக்கி விடலாம் என்று திட்டம் போடுகிறார் முதல்வர் விக்னேஸ்வரன் என்ற சிங்களத் தேசியவாதிகளின் கருத்து, சாதாரண சிங்கள மக்களிடத்தில் தவறான சமிக்ஞைகளையே காண்பிக்கும்.

சமஸ்டி ஆட்சிமுறையைக் கோருவதை அரசாங்கமும் சரி, பெரும்பாலான சிங்கள கட்சிகள் மற்றும் தலைவர்களும் சரி, ஏதோ ஒரு பெரிய குற்றம்போலவே பார்க்கின்ற நிலை உள்ளது.

ஒற்றையாட்சி நிர்வாக அலகு, தனது எல்லா மக்களுக்கும் சமமான உரிமைகளையும் வசதிகளையும் செய்யத் தவறும் போது தான் இந்த மாற்று ஆட்சிமுறை பற்றிய கோரிக்கைகள் எழுந்துள்ளன.

மத்தியில் ஒன்று குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை, எல்லா சமூகங்களுக்கும் எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தப்படாத நிலை ஒன்றின் போது தான், மக்களுக்கு ஒற்றையாட்சி மீதான சலிப்பும், வெறுப்பும் ஏற்படுகிறது.

ஆரம்பத்தில் இருந்தே இலங்கையின் ஒற்றையாட்சி நிர்வாக அமைப்பு சிறுபான்மையின மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. அதற்குக் காரணம், இன ரீதியான அடக்குமுறைகளும் உரிமை மறுபபுகளும் தான். அதுவே ஒரு பெரும் போருக்கான காரணியாகவும் அமைந்தது.

அந்தப் போர் இன்னமும் மாறாத பெரும் வடுக்களுடன் முடிந்து போனாலும், இனப்பிரச்சினையை உருவாக்கிய ஒற்றையாட்சி மட்டும் இன்னமும் வலுவாக கோலோச்சுகிறது. இந்த ஒற்றையாட்சி கோடபாடு மீண்டும் சிறுபான்மையின மக்களிடையே ஏமாற்றத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் ஒன்றாகவே மாறியுள்ளது.

இத்தகைய சூழலில், மாற்று ஆட்சி முறை ஒன்றின் ஊடாக, எல்லா இனங்களையும், மதங்களையும், சமூகங்களையும் ஒன்றிணைப்பது குறித்து ஆலோசிப்பதே பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், ஒற்றையாட்சியை வலுப்படுத்த நினைத்த அரசாங்கம், அதனை சாதகமான முறையில் பயன்படுத்திக் கொண்டிருந்தால், மாற்று ஆட்சிமுறை ஒன்றை உருவாக்குவது பற்றிக் கூற வேண்டிய நிலை வடக்கு மாகாண முதல்வருக்கு ஏற்பட்டிருக்காது.



வடக்கு மாகாண முதல்வராகப் பதவியேற்று மூன்று மாதங்களாகிவிட்ட நிலையிலும், பெரிதாக எதையும் செய்ய முடியாத நிலையில் தான் அவர் முதல்வராக நீடிக்கிறார்.

எனவே மற்றெல்லோரையும் விட, ஒற்றையாட்சியின் குறைபாடுகளை அவரே நன்கறிந்தவராக இருக்க முடியும்.

ஒற்றையாட்சி முறையைத் தமது பலமாக எண்ணிக் கொணடிருக்கிற சிங்களத் தேசியவாத சக்திகளுக்கு, அதுவே பெரும் பலவீனம் என்பதை ஒரு பெரும் போருக்குப் பின்னரும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒற்றையாட்சியின் மீதான ஒரு பகுதி மக்களின் அவநம்பிக்கை, ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கோட்பாட்டை ஒருபோதும் வலுபபடுத்தாது என்பதை அவர்களோ அரசாங்கமோ புரிந்து கொள்ளவில்லை.

வெளிநாடுகளின் நிர்ப்பந்தங்களினால் வடக்கு மாகாண சபையை உருவாக்க இணங்கிய அரசாங்கம், 13ஆவது திருத்தச சட்டம் வழங்கியுள்ள அதற்குரிய அதிகாரங்களை பயன்படுத்த இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து, எல்லா இனமக்களும் உரிமைகளை அனுபவிக்கின்ற சூழல் ஒன்றை உருவாக்கியிருந்தால், அரசாங்கத்துக்கு இப்போதுள்ள பல நெருக்கடிகள் எப்போதோ தீர்ந்திருக்கும்.

ஆனால், அரசாங்கம் அவ்வாறு செய்யத் தயாராகவும் இருக்கவில்லை.

அவ்வாறு அதிகாரங்களைப் பகிர அரசாங்கத்தை அனுமதிக்க, சிங்களத் தேசியவாத சக்திகளும் தயாராக இருக்கவில்லை. இதன் காரணமாகவே, ஒற்றையாட்சி மீதான தமிழர்களின் வெறுப்பு இன்னும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

சமஸ்டி ஆட்சிமுறை மூலமே தாமும் சமமாக மதிக்கப்படும் நிலையை உருவாக்க முடியும் என்ற கருத்தே பெரும்பாலான தமிழர்களிடம் உள்ளது.

இந்தநிலையில், ஒற்றையாட்சி முறையை ஒழித்து, புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றும் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஈடானது அல்ல. அதேவேளை, தனிநாடு தான் வேண்டும் என்று இன்னமும் ஒற்றைக்காலில் நிற்கின்ற அளவுக்கு தமிழர்கள் முடடாள்களுமல்ல.

நீண்டதொரு போரையும், பேரழிவுகளையும் சந்தித்த ஓர் இனம், அதற்குள் தனிநாடு கோரிப் போராடுகின்ற அளவுக்கோ, அதைப போய் அரசாங்கத்திடம் கோருகின்ற அளவுக்கோ இல்லை.

அது அரசாங்கத்துக்கும் சரி, சிங்களத் தேசியவாத சக்திகளுககும் சரி நன்றாகவே தெரியும்.

ஆனாலும், தமிழர்கள் நாடடைப் பிரிக்க முனைவதாக கூறிக் கொண்டு, ஒற்றையாட்சியை வலுபபடுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்குமேயானால், அது அரசியலமைப்பு மாற்றம், சமஸ்டி ஆட்சி முறைக்கான கோரிக்கைகளைத் தான் இன்னும் இன்னும் பலப்படுத்தும்.

*-கே.சஞ்சயன்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தை மதிக்காத சமூகம் நீதி வழங்க தகுதியற்றது !



## ஆன்மீகம் 89

இந்தப் பூமியில் நீதி என்று எதுவும் கிடையாது. உங்களுக்கு நீதியாகப் படுவது வேறு சிலருக்கு அநீதியாக தெரியலாம். பொவாக இந்த நீதி என்ற வார்த்தை யாரோ ஒருவரை பழி தீர்க்கத் தூண்டும் வதற்குத்தான் பயன்படுத்தப்படு கிறது. அது சட்டபூர்வவமான பழி வாங்கலாக இருந்தாலும் சரி, சட்டத்துக்குப் புறம்பான பழிவாங் கலாக இருந்தாலும் சரி. யாரோ ஒருவர் ஒரு கொலையைச் செய்து விட்டால், தான் சரியான தீர்ப்பை வழங்கிவிட்டதாக அவர் நினைத்துக் கொள்கிறார். அதனால்தான், அவர் கள் அப்படிச் செய்கிறார்கள். எனவே, நீங்கள் நீதிபதியின் அடிப் படயில் செயல்படாதீர்கள். அதற் குப்பதிலாக நாம் சட்டங்களை எளிமையாக்கி அவற்றை நடை முறைப்படுத்துவோம்.



இப்போதைக்கு யாருக்குமே நீதியைப் பற்றி சிந்திப்பதற்கு கான உரிமை கிடையாது. முதலில் நாம் சட்டத்தை மதிக்கின்ற ஒரு சமூக மாக மாறவேண்டும். அதன்பிறகு தான் நமக்கு நீதி கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. சில சமயங் களில் சட்டங்கள் கொடூரமான வையாக இருக்கும் போது, அந்த சட்டத்தை உடைத்து நாம் நியாயம் வழங்கலாம். ஆனால், அது போன்ற வாய்ப்புகள் கிடையாது. இங்கு முதலில் சட்டங் களை தீவிரமாக அமுல் படுத் வேண்டும்- இது அநீதியாகத் தோன்றினா லும். நாம் நடைமுறைப் படுத்தித்தான் ஆக வேண் டும். ஏனென்றால், ஒரு ஒழுங்குமுறை இல்லாமல், எந்த சமுதாயத்திலும் நிதி நிலைத்திட வழியில்லை. இப்போது, நம்மிடம் எந்த ஒரு ஒழுங்குமுறையும் இல்லை. என்னும் போது நீதியைப் பற்றிய கேள்வி எங்கிருந்து வந்தது? இப் படிப்பட்ட சமுதாயத்தில் பழி தீர்ப்பதுதான் நீதி என்று ஆகிவிடும்.

ஒரு சமூகத்தில் சட் டத்தை எப்படி தீவிரமாக அமுல்படுத்துவது? அதற்கு மிக முக்கியமாகத் தேவைப் படும் ஒரு விடயம், சட்டங்களை எளிமைப்படுத்துவதுதான். நாட்டில் வாழ விரும்பும் அனைவருமே இந்த நாட்டின் அடிப்படைச் சட்டங்களைப் புரிந்து வைத்திருக்க வேண்டும்.இந்த நாட்டில் இருக்கும் பெரும்பாலான வர்களுக்கு அடிப்படைச் சட்டங்கள் கூடத் தெரியாது. ஒவ்வொரு முறை நீங்கள், ஏதாவது ஒரு சட்டத்தைப் பற்றி கேட்கும்போதும், தெரியாது என்று கை விரித்து விடுபவர்கள். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை மற்றவர்கள் சொல்லித்தர வேண்டும் என்று நினைத்துக் கொண் டிருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது. இந்த நாட்டில் நீங்கள் வாழ வேண்டுமானால், குறைந்த பட்சம் அடிப்படைச் சட்டங்களாவது தெரிந் திருக்கவேண்டும். தெருவில் வண்டி ஓட்ட வெண்டுமென்றால், அதற்கான சட்டங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையா?

-சத்குரு ஜக்கி வாசுதேவ்-




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



11

அக்காலத்தில் ஒலியி லும் ஒளியிலும் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர்கள். தின்ஷா தெஹ்ராணி, ஜித்தன் பானர்ஜி ஆகியோர். அப்போது ஒளிப்பதிவு மேதை சுந்தர்ராவ் நட்ர்னி, ஜூபிடா நிறுவனத்தில் நிரந்தர விற்பன்னர்.

கிருஷ்ணா லீலா படத்தின் ஏழு



கிருஷ்ணன்களை ஒன்றாக (மாஸ்க்) படம் பிடித்துக் காட்டியவர். அவர் தான், சென்னையில் 110 வாரம் ஓடிய *ஹரிதாஸ்* படத்தின் இயக்குநர்.

அவர், மகாதேவி படம் எடுத்தார். அக்கதை லாதா மங்கேஷ்கரின் அப்பா வால் நடத்தப்பட்ட நாடகம். மகாராஷ் டத்தில் புண்யபௌத்ரி (புண்ணிய புத்திரி) என்ற பெயரில் நடத்தப்பட்டது.

அவர் மதுவிலக்குக்காகவும் ஒரு கதை எழுதினார். துளிவிஷம் என்ற அந்தக் கதையையும் நட்கர்னி வாங்கினார்.

அதைத் தனக்குக் கொடுக்கும்படி புரட்சித் தலைவர் வாங்கிக் கொண்டார்.

ஒருவன் குடிப்பதற்கும் குடிக்காமல் இருப்தற்கும்அவனவன் மனைவியே காரணம் என்ற அரிய கருத்தைச் சொல்லும் கதை.

மகாதேவி எனக்கு சீதேவியானது. திரையரங்கில் வேலை செய்யும் வாய்ப்பு எனக்கு அதில்தான் கிடைத்தது.

புரட்சித்தலைவர், கவியரசு கண்ண தாசனுடன் சேர்ந்து எழுதும் பாக்கி யத்தை எனக்குத் தந்த படம்.

தத்துவம் பொதிந்த நீண்ட நாடக வசனங்களை கவிஞரும் நானும் சுவை குன்றாமல் சுருக்கித் தந்தோம். அப் படத்தில் புரட்சித் தலைவருடன் சாவித் திரி நடித்தார். அதில் நான் சில காட்சி களுக்கும், கவிஞர் சில காட்சிகளுக் கும் வசனம் எழுதினோம்.

என்னிடம் வந்து சேர்ந்தது நாய கன்- நாயகிக்குள்ள காதல் காட்சிகள். முக்கியமாக முதலிரவுக் காட்சி. அப் போதெல்லாம் முதலிரவுக் காட்சி என் றால் ஒரு பாட்டு இருக்கும். கணவன் மனைவிக்குள்ள காட்சிகளை கொஞ் சம் நெருக்கமாகவே எழுதிக் கொடுத் தேன். செம்மல் பார்வைக்குப்போனது.

என்னைக் கூப்பிட்டு அந்த அமைப்பை மாற்றச் சொன்னார்.

"கணவன் மனைவிக்குள் நெருக்கம் தானே?" என்றேன்.

"நான் அப்படி நடிக்க விரும்ப வில்லை. சாதாரண ஒரு நடிகையுடன் அப்படி நடிக்கலாம். இவரோ ஒரு வருக்கு மனைவியாகப் போகிறவர். இப்படம் வெளிவரும் போது, கல் யாணத்தின் பின், ஒரு குழந்தைக்கு தாயகவும் கூட அவர் இருக்கலாம். அதனால் வேண்டாம். விலகியிருந்தே காதல் செய்யலாம்" என்றார்.

அப்போது சாவித்திரி- ஜெமினி கணேசனின் காதல் உச்சக்கட்டத்தி லிருந்தது.

சாவித்ரி, படப்பிடிப்பில் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் ஜெமினி கணேசனுக்குப் போன் செய்யப் போய் விடுவார்.

அவர் அரங்குக்குள் நடிகை. வெளியே அன்பான காதலி.

போன் பேசிவிட்டு புன்னகை யுடன் வருவார். ஷாட் ரெடி என்றதும் காட்சிக்கேற்ப முகபாவம் எப்படித்தான் மாறுமோ தெரியாது.

இந்தக் காதல் காட்சி வசனத்தை முதலிலேயே பிரதியெடுத்து அவரி டம் கொடுத்திருந்தேன். பிறகு மாற் றப்பட்டதைப் பார்த்து காரணம் கேட்டார்.

சொன்னேன்.

"அப்படியா? நான் என் காதலை ரகசியமாக அல்லவா வைத்திருந் தேன்" என்றார்.

"எம்.ஜி.ஆரைப்பொறுத்தவரை எதுவும் ரகசியமாக இருந்ததில்லை. எல்லோரும் எழுத்தைப் படிப்பார்கள் அவர், எண்ணத்தையே படித்து விடுவார்" என்றேன்.

சாவித்திரி சிரித்து, "அவர் வாயால் மனைவி என்று சொல்லி ஆசீர்வதித்துவிட்டார் இல்லையா? அதுபோதும். நாங்க கல்யாணம் கட்டியதும் அவரிடம் தான் ஆசிவாங்கு வேன் முதலில்" என்றார் ஒரு குழந்தை யைப் போல!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக குடும்ப வேளாண்மை ஆண்டும் சேதன விவசாயமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

2014 ஆம் ஆண்டு உலக குடும்ப வேளாண்மைக்கான ஆண்டாக [International Year of Family Farming] ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் அனுஷ்டிக்கப்படுவதற்கு பல திட்டங்கள் பலமட்டங்களில் வகுக்கப்பட்டிருக்கின்றன. உலகெங்குமிருக்கின்ற மக்களது உணவுத்தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த அணுகுமுறையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கியிருக்கினறது. யும் இலாபத்தை உயர்த்துதலுடன் பசி பட்டினியிலிருந்து மக்களை பாதுகாத்தல், உணவு பாதுகாப்பினை வழங்கல் இவற்றுடன் சுற்றுச் சூழலையும் பாதுகாத்தலுமாகும். 2011ஆம் ஆண்டிலிருந்து உலக உணவு ஸ்தாபனத்தின நடவடிக்கைகள் உலக மையங்களிலுள்ள நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறுபட்ட உணவுற்பத்தி, வாழ்வாதார உயர்ச்சி மற்றும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றுடன் இணைந்து கொள்வதாகும். மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டு குடும்ப வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக பல்வேறு கொள்வது இங்கே சாலப்பொருந்தும். அசேதன இரசாயனங்களின் அளவற்ற பாவனையினால் மக்களுக்கேற்படும் அசௌகரியங்களை குறிப்பாக மக்களது சுகாதாரம் பற்றிய விடயத்தை முன்னிறுத்தலாம்.

கடந்த "முகாமைத்துவ மன்றத்தில்" இதுபற்றி பலமாக ஆராயப்பட்டுள்ளதுடன் சேதன வேளாண்மையை ஊக்குவிக்கும் விடயங்களை அவசியம் கலந்துரையாடி அதன் மூலம் நஞ்சற்ற உணவினை மக்கள் பெறுவதற்கு ஆவன செய்வது அவசியமாகும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வடபகுதி

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 42-I




வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியிலுள்ள முற்போக்கு விவசாயிகளுக்கு விளக்கமளித்தபோது...

குடும்ப வேளாண்மையில் பலவிதமான நன்மைகளுண்டு. இருக்கினற வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்துதல மற்றும் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் வேளாண்மை முனைப்புப் பெறுவதே இதன் நோக்கமாகும்.

குறிப்பாக பயிர்ச்செய்கைக்கான வேலையாள் தேவையினை குடும்ப அங்கத்தவர்களை உள்வாங்கி வேளாண் செய்கையில் இலகுவாக பூர்த்தி செய்ய முடியும். அத்துடன் நொந்து போயிருக்கின்ற மக்களுக்கான தீர்வாகவும் குடும்ப வேளாண்மை அமையும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

2008 ஆம் ஆண்டு ஆபிரிக்க ஆசிய மற்றும் இலத்தீன் அமெரிக்க கண்டங்களிலுள்ள 60 நாடுகளில் உள்ள 350 நிறுவனங்களிணைந்த உலக கிராமிய மன்றத்தினால் உலக குடும்ப வேளாண்மைக்கான ஆண்டினை 2014 இல் கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு பிலிபைன்ஸ் நாட்டினது கோரிக்கைக்கு இணைவாக 37ஆவது உலக உணவு ஸ்தாபனத்தினது மாநாட்டு அமர்வில் பிரேரிக்கப்பட்டதற்கு இணைவாக ஐக்கிய நாடுகளின் 66ஆவது பொதுக்கூட்டத்தில் 2014ஆம் ஆண்டினை உலக குடும்ப வேளாண்மைக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு உலகளாவிய நாடுகளின் அரசாங்கங்களுடன் ஐக்கிய நாடுகளின் அபிருத்திக்கான திட்டம் மற்றும் உலக உணவு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம், CGIAR ஆகியனவற்றுடன் உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையும் கோரப்பட்டுள்ளது.

உலக குடும்ப வேளாண்மை ஆண்டினது முக்கிய நோக்கமாக குடும்ப வேளாண் மையின் தரத்தை மேலுயர்த்துதலும் சிறிய மற்றும நடுத்தர விவசாயிகளின் வாழ்வாதாரத்தை நலத்திட்டங்களை கொண்டுவரும் என நம்புவோம்.

குடும்ப வேளாண்மையின் முக்கியத்துவம எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் நஞ்சற்ற உணவுற்பத்தியிலும் பலவகையான உணவுற்பத்தி மற்றும் போரில் உறவுகளை, உடமைகளை இன்னும் குடும்ப தலைமையை இழந்திருக்கும் மக்களுக்கு நன்மை பயத்தலாகும். உலகளாவிய ரீதியில் சிறிய விவசாயிகளின் கருத்துக்களை உலகம் உன்னிப்பாக றியோ 20 எனத்தலைப்பிட்டு உலகளாவிய மாநாட்டில் கலந்தாலோசித்திருக்கின்றது. அதற்கும் மேலாக இம்முறை ஐக்கிய நாடுகளின் கவனத்தை குடும்ப வேளாண்மை ஈர்த்திருப்பதற்கும் காரணமுண்டு. உலகளாவிய ரீதியில் பார்த்தால் உணவுற்பத்தி அனைவருமிணைந்த செயன்முறையாக பரிணமித்திருப்பதனால் குடும்ப வேளாண்மையில் குடும்ப அங்கத்தவர்கள் பங்குகொண்டு அவரவர் திறனுக்கேற்ப வசதிக்கேற்ப சிறு சிறு வேலைகளை செய்து கொடுப்பது முக்கியத்துவமாகிறது. குடும்பத்தினது உழைப்பு முழுமையாக உள்வாங்கப்படுவது இதில் அவசியமானதொன்று.

குடும்ப வேளாண்மையின் ஓரங்கமாக வீட்டுத்தோட்டம் அமைப்பது வடபகுதியைப் பொறுத்தவரையில் நஞ்சற்ற உணவை மக்கள் உட்கொள்ள வேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டதாகக் கொள்ளலாம். வீட்டுத்தோட்டத்தில் பலவகையான சிறிய எளிய பாரம்பரிய முறைசார்ந்த தொழில்நுட்பங்களை உள்வாங்கலாம். மேலும் நஞ்சற்ற உணவின் அவசியத்தை அனைவரும் தற்போது உணர்ந்திருக்கும் இத்தருணத்தில் ஐக்கிய நாடுகளின் பிரேரணை முன்மொழியப்பட்டிருப்பதும் இதனை மேலும் வலுவூட்டுவதாக இருக்கின்றது. அதிலும் சேதன வேளாண்மையின ஊடாக உற்பத்திசெய்யும் உணவுகளை உட்

யில் தேவையற்ற விதத்தில் பயன்படுத்தப்படும் பீடைநாசினிகள் மற்றும் அசேதன இரசாயனபசளைகள் என்பவற்றின் பாவனையை மட்டுப்படுத்துவதற்கும் பீடைகளைக் கட்டுப்படுத்துவற்கு பீடைநாசினிகள் தவிர்ந்த ஏனைய வழிமுறைகளை பயன்படுத்துவதற்கும் மாகாண மட்டத்தில் பல திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

இவற்றுடன் மக்களுக்கு தொடர்ந்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களினை குடும்ப வேளாண்மைக்குள் குறிப்பாக வீட்டுத்தோட்டத்தின் முழுமையான பங்குதாரர்களாக மாற்றிவிடலாம். வடபகுதியில் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களுள தொடர்ந்தும் இப்பீடைநாசினிகளின் தாக்கம் பலமானதாக மக்களின் சுகாதாரத்தை கேள்விக்குறியாக்கி விட்டிருக்கின்றது. இதனை நாம் அவசியமான விடயமாக கருத்திற் கொண்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அதேநேரத்தில் அவர்கள் நஞ்சற்ற உணவினை உட்கொள்வதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

சேதன விவசாயம் பற்றிய கலந்துரையாடலில் ஜீவஉயிர் வேளாண்மை [Biodynamic Agriculture] பற்றிய விளக்கங்களுடன் கடந்த 18 ஆண்டுகளாக எமது நாட்டுக்கு வருகை தந்து பலமட்டங்களிலும் கலந்துரையாடி பல கருத்துக்களை மக்களுக்கு வழங்கும் பேராசிரியர் ரிச்சாட் தோர்ட்டன் ஸ்மித் சேதன வேளாண்மையினை முன்வைத்து இம்முறை எமது பிரதேசத்தில் கலந்துரையாடியது மிக முக்கியமான நிகழ்வுகளாகும். இவருடைய ஜீவ உயிர் வேளாண்மை பற்றிய பயிற்சி இலக்கம் 60, அரசடி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பினால் [SOND] இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றது. ஆர்வமுடையோர் பயிற்சிக்கான கட்டணத்தை செலுத்தி முழுமையாகப் பங்குபற்றி பயன் பெறலாம் என அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு அறிவித்திருக்கின்றது.

சேதன வேளாண்மையினை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களுடன் கிராமிய மட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி மக்களின் முழுமையான பங்களிப்பினூடாக நஞ்சற்ற உணவினை உற்பத்தி செய்யும் காலத்தை யாழ்ப்பாண முகாமைத்துவ மன்றம் எதிர்பார்த்திருக்கின்றது. இது அனைவரும் இணைந்து செயற்படுத்த வேண்டிய விடயமாகும். வெறுமனே அங்கும் இங்குமாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைத் தவிர்த்து உண்மையாக இனி வரும் எமது சந்ததியை வளமான்தாக வாழ வைக்க உழைத்தல் அவசியமாகின்றது. விவசாயம் சார்ந்த அனைவருக்குமான தலையாய பணியாகவும் இதனை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சேதன வேளாண்மையை முன்னெடுக்க கடந்த காலங்களில் பல்வேறுபட்ட மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இறுதியில் கைகூடாமல் போனதை கசப்பான அனுபவமாக கொள்ளாது இன்னும் பல்வேறுபட்ட முயற்சிகளை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வது அவசியமாகும். எமது சூழலை நாம் பாதுகாக்க தவறினால் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு மேலும் முகங்கொடுக்க முடியாது போய்விடும். இதனை கருத்திற் கொண்டு குடும்ப வேளாண்மையின் ஓரங்கமாக "சேதன வேளாண்மை மையம்" உருவாக்கம் பெறுகின்றது.

முழுக்க முழுக்க சேதன முறைமூலம் உணவுற்பத்தி செய்ய எமது விவசாய பெருமக்களை தூண்டுவது இம்மையத்தின் நோக்கமாகும். பாரம்பரிய முறைப்படி உணவுற்பத்தி செய்த காலத்தை அனைவரும் நினைவுபடுத்தி கொள்ளும் இந்நேரத்தில் சேதன உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் மக்களை தூண்டவேண்டும். குடும்ப வேளாண்மை என்பதனை மையப்படுத்திய இவ்வாண்டு செயற்பாடுகளுக்குள் சேதன வேளாண்மையை முன்னிலைப்படுத்தி செயற்றிட்டங்களை தீட்டுதல் முக்கியம் பெறுகின்றது. எமது சூழலை நாமே பாதுகாக்க தவறினால் எமது எதிர்கால சந்ததி வாழ்வதற்கு வழியில்லாமல் போய்விடும். இதனை நாம் அனுபவமூடாக தெரிந்தும் உணர்ந்தும் இன்னும் அதுபற்றி அலட்டிக்கொள்ளாமல் இருப்பது நாம் இத்தேசத்திற்கு செய்யும் துரோகம் எனவே கொள்ளவேண்டும்.

முகாமைத்துவ மன்றத்தின் கலந்துரையாடலின் இறுதியில் எழுதும் இக்கைகளுக்கு இப்பணி கொடுக்கப்பட்டிருக்கின்றது. புலமையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து மக்களின் சுகாதார வாழ்வுக்கு முன்னுரிமையளித்து இறையாசியுடன் சேதன வேளாண்மை சார்ந்த விடயங்களை முன்னோக்கி நகர்த்த சேதன வேளாண்மை மையம் முன்னின்று பாடுபடும் என மறுபிறப பெடுத்திருக்கும் எழுதும் இக்கைகள் இவ் வருட செய்தியாக உறுதிதருகின்றன. என் பணி செய்து கிடப்பதே. வாருங்கள் அனைவரும் இணைந்து சேதன வேளாண்மை உலகத்தை கட்டியெழுப்புவோம். இது சொல்லிச் செல்வதற்கல்ல செய்து காட்டுவதற்கான அறைகூவலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகம் போற்றும் வைகுண்ட ஏகாதசி விரதம்

இந்துமதத்தில் ஆன்மீக உணர்வை நெறிப்படுத்தும் வழிமுறைகளில் மிக இலகுவான ஒன்று விரதமாகும்.

மனம், மொழி, மெய் மூன்றையும் கட்டுப்படுத்தி ஒருங்கு சேரச் செய்து இறைசிந்தனையை வளர்த்து இறைவனருகே எம்மை அழைத்துச் செல்லும் நெறிமுறை விரதமாகும். காயத்திரி மந்திரத்திற்கு நிகரான மந்திரமில்லை. காசியைவிட சிறந்த தீர்த்தம் இல்லை. ஏகாதசிக்கு நிகரான விரதம் இல்லை என்பது முன்னோர் வாக்கு.


ஒருமாதத்தில் பதினைந்து நாட்களைக் கொண்ட ஒரு காலப் பகுதி ஒரு பக்ஷமாகும். சுக்கில பக்ஷம், கிருஷ்ண பக்ஷம் ஆகிய இரண்டு பக்ஷங்களிலும் பிரதமை முதல் எண்ணி வர பதினொராம் நாளாக வருவது ஏகாதசி.

இவ்விதம் மாதத்தில் இரு ஏகாதசிகள் வருகின்றன. ஒரு வருடத்தில் இருபத்து நான்கு அல்லது இருபத்தைந்து ஏகாதசிகள் வருகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர் வழங்கப்படுகின்றது.

இவற்றில் மார்கழி மாதத்தில் வருகின்ற இரு ஏகாதசிகளில் வளர்பிறை (சுக்கில பக்ஷ) ஏகாதசியை மோக்ஷ ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி, பெரிய ஏகாதசி, சுவர்க்க வாசல் ஏகாதசி, முக்கோடி ஏகாதசி எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

கன்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, மனம் என்பதுடன் சேர்ந்து பதினொரு இந்திரியங்களால் ஆற்றப்படுகின்ற தீவினைகள் எல்லாம் பதினொராவது திதியாகிய ஏகாதசி விரதத்தைக் கடைப்பிடிப்பதால் அழிந்து விடுகின்றன.

பத்மபுராணத்தில் முரன் என்ற கொடிய அரக்கனைக் கொலை செய்வதற்காக விஷ்ணுவில் இருந்து தோன்றிய ஏகாதசி என்ற பெண்ணால் அரக்கன் அழிந்தான். இது நிகழ்ந்த மார்கழி மாதத்தில் திருமாலின் சக்தியாகிய ஏகாதசியன்று விரதமிருந்து அருளைப் பெறுகின்றோம்.



காத்தற் கடவுளாகிய மகா விஷ்ணுவின் அருட்கடாட்சத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற ஏகாதசியைக் கடைப்பிடிக்க முடியாதவர்கள் மார்கழி மாதத்தில் வருகின்ற வைகுண்ட ஏகாதசியைக் கடைப்பித்தாலேயே நாராயணனின் திருவருளைப் பெற்றுக் கடைத்தேறலாம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் எமலோகம் சென்று பார்த்த போது உயிர்கள் தாம் செய்த கொடுமைகளினால் படும் துன்பத்தைக் கண்டு அவர்களை ஈடேற்றக் கூறப்பட்ட விரதம் வைகுண்ட ஏகாதசி விரதம் ஆகும்.

பிரம்ம தேவனை அழிக்க வந்த மது, கைடபர்களை தடுத்த திருமால் அவர்களுக்கு நல்லறிவைக் கொடுத்து அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மார்கழி மாத ஏகாதசியன்று வைகுண்டத்தின் வடக்கு வாசலைத் திறந்து அவர்களைப் பரம பதத்துக்கு அனுப்பினார்.

இந் நாள் வைகுண்ட ஏகாதசி எனவும் சுவர்க்க வாசல் ஏகாதசி எனவும் அழைக்கப்படுகின்றது. இவர்களின் வேண்டு கோளுக்கு இணங்கவே உலகிலுள்ள எல்லோரும் வைகுந்த தரிசனம் பெறவேண்டுமென வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறக்கப் பெற்று சுவாமி பவனி வருகின்றது.

இந்த நாளான இன்று திருமால் உறையும் திருத்தலங்களில் பகல் பத்து, இராப்பத்து என பெருவிழா எடுக்கின்றனர்.

இருபது நாட்களைக் கொண்ட இவ்விழாவில் வைகுண்ட ஏகாதசிக்கு முதல் பத்து நாட்களும் திருமொழித் திருவிழாவும் அடுத்த பத்து நாளும் திருவாய் மொழித் திருவிழா எனவும் கொண்டாடி கடைசி நாளில் நம்மாழ்வார் முத்தியடைந்த தினம் எனவும் நம்பப்படுகின்றது.

கலியுகத்தில் நம்மாழ்வாருக்கு முன் வைகுண்டத்துக்கு சென்றவர் யாரும் இல்லை என்பதால் நம்மாழ்வாருக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இவ் விரதத்தை அனுஷ்டிப்பவர் முதல் நாள் ஒரு நேர உணவு அருந்தி மறுநாள் ஏகாதசி அன்று உபவாசம் இருந்து ஏழு முறை துளசி இலையை உண்டு குளிர்நீர் குடிக்கலாம். அன்றே நெய், காய்கனிகள், நிலக்கடலை, பால், தயிர் என்பவற்றை இறைவனுக்கு படைத்து உண்ணலாம். இரவு முழுவதும் கண் விழித்து இறைவனின் சகஸ்ர நாமம், பக்திப் பாடல்களைப் படித்து மறுநாள் துவாதசி அன்று உப்புப் புளிப்பு சுவையற்ற உணவை உண்டு பாறணை செய்யலாம். இவ் விரதத்தை அனுஷ்டிப்பவருக்கு எல்லா வகைச் சிறப்புக்களும் கிடைக்கின்றன.

ஏகாதசி அன்று தாய், தந்தைக்கு சிரார்த்தம் செய்யக் கூடாது. ஏகாதசி அன்று விரதம் இருப்பவர்களை யார் இகழ்கிறார்களோ அவர்கள் நரகத்தில் இடர்படுவர்.

ஏகாதசி அன்று துளசி இலைகளைப் பிடுங்கக் கூடாது. வைகுண்ட ஏகாதசியை விதிப்படி கைக்கொள்பவர்கள் அஸ்வமேத யாகம் செய்து கிடைக்கும் பலனைப் பெறுவார்கள். அதனால் நாமும் விரதம் இருந்து எல்லாம் வல்ல மகாவிஸ்ணுவின் அருளைப் பெறுவோமாக.

எஸ்.கே.என்.தவராஜா (M.A)
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.

# மன்னார் மற்றும் யாழ்.ஆயர்களை கைது செய்ய வேண்டுமாம்

## பொதுபல சேனா கூறுகின்றது

தேசத்துரோக செயலில் ஈடுபடும் மன்னார் மற்றும் யாழ். கத்தோலிக்க ஆயர்களை உடனடியாக கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தேஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்கள மக்களின் ஒற்றுமையை சீர் குலைக்கும் இந்த ஆயர்களின் சதியை தமிழ் இந்துத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இராணுவம் மக்கள் மீது இரசாயன ஆயுத தாக்குதல், கொத்து குண்டுகளை போட்டனரென்றும் எனவே சர்வதேச விசாரணை தேவையென்றும் அமெரிக்க விசேட பிரதிநிதி ஸ்டீபன் ராப்பிடம் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் தெரிவித்தமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் இந்து சமூகத்தினர் நூற்றுக்கு 95வீதம் வாழ்கின்றனர். அதில் வடித்தெடுத்த சிறுதொகை தமிழ் மக்கள் தான கத்தோலிக்கர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர்.

அவ்வாறானதோர் நிலையில் இந்த இரண்டு ஆயர்களும் மேற்குல நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப பிரபாகரன் இருந்த காலத்திலும் இன்றும் தமது நடவடிக்கைகளை கைவிடாது முன்னெடுத்து வருகின்றனர்.

எமது இராணுவத்தினர் கொடுமையான புலி பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மனிதாபிமான அடிப்படையிலேயே யுத்தத்தை முன்னெடுத்து மக்களை பாதுகாத்தனர். யுத்தத்தின் போது சில இழப்பீடுகள் ஏற்படலாம் அது இயற்கை. ஆனால் இந்த ஆயர்களின் குற்றச்சாட்டுகள் போன்று எமது படையினர் நடந்து கொள்ளவில்லை.

ஒன்றுபட்ட இலங்கையை, மக்களை மீண்டும் பிளவுபடுத்த இவர்கள் இருவரும் முயற்சிக்கின்றனர். இங்கு பிரிவினையை ஏற்படுத்துவதே இவர்களின் இலக்காகும். அதனை அடைவதற்காக மேற்குலகத்தினருக்கு பொய்யான தகவல்களை வழங்குகின்றனர். இதனை தமிழ் இந்துத் தலைவர்கள் புரிந்து கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அதைவிடுத்து பிரிவினைவாத ஆயர்களின் பொறியில் சிக்கலாகாது. இலங்கைக்கு எதிராகவும் பிரிவினைவாதத்திற்கும் துணை போகும் மன்னார், யாழ். ஆயர்களை கைது செய்ய வேண்டும்.

அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# பாலியல் தொழிலுக்காக இலங்கைப் பெண்கள்

(கொழும்பு)

இலங்கையை சேர்ந்த யுவதிகளை பாலியல் தொழிலுக்காக மாலைதீவுக்கு அனுப்பி வைக்கும் திட்டம் ஒன்று பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


பன்னிப்பிட்டி அன்டி மற்றும் மடபாத்த சத்துராணி ஆகிய பெண்கள் இந்த நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், இதன் முக்கியமான நபராக சுகூர் என்ற வெளிநாட்டு நபர் செயற்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் மேற்படி பெண்களின் ஆடம்பர வீடுகளை சோதனையிட்டனர்.

அப்போது அங்கிருந்த பெண்கள் தப்பிச் சென்று விட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்த இலங்கை பொலிஸார் மாலைதீவு பொலிஸாரின் உதவியை நாடியுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

# மிதக்கும் புத்தகசாலை கப்பல் திருகோணமலைக்கு வந்தது



உலகின் முதலாவது மிதக்கும் புத்தகசாலை கப்பல் நேற்று முன்தினம் மாலை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. பொதுமக்கள் இந்த கப்பலிலுள்ள புத்தகசாலையை இன்றுமுதல் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை வரை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

60 நாடுகளைச் சேர்ந்த 400 தொண்டர்கள் பணியாற்றும் குறித்த கப்பலில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான விடயங்களிலுள்ள புத்தகங்களை கட்டுப்படியான விலையில் கொள்வனவு செய்ய முடியும்.

1970 ஆம் ஆண்டிலிருந்து 150 நாடுகளில் இதுவரை 4 கோடி 30 இலட்சத்திற்கு அதிகமான பார்வையாளர்களை இந்தக் கப்பல் வரவேற்றுள்ளது.

வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களில் நண்பகல் 12 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணி வரையும் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் காலை 10 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படுவர்.

பிரவேச கட்டணம் 50 ரூபாவாகும். ஆனால் 12வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கும் பாடசாலை சீருடையுடன் வரும் மாணவர்களுக்கும் பிரவேசம் இலவசம் ஆகும்.


காலி துறைமுகத்திலிருந்து திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த குறித்த கப்பலை மாணவர்கள் அஷ்ரப் இறங்கு துறையில் வைத்து வரவேற்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

685



## மலைப்பாம்பும் மான்குட்டியும்

குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும்.

இருபது அடிக்கும் நீளமாக மரங்களின் கிளைகளில் படர்ந்து இருக்கும் தனது அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தது.

கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர இப்படி லட்சணமான கரும்புள்ளி களுடன் பார்ப்பது ரொம்பவும் அரிது.

மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும்.

ஆனால் குறட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக்கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப் பிடியில் நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குறட்டி என்று பெயர் வழங்கி வந்தது.

குறட்டி தனது தலையை ஒரு கிளை யின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில் பட்டது.

நீண்டு கிடந்த தனது உடலை வேக மாக தன்னை நோக்கி இழுத்தது.

அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும், அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத்தான் வரவேண்டும்.

அந்த மிளா மான் ஆற்றில் இறங் கியது. குறட்டியில் வாயில் நீர் சுரந்தது.

மீதமுள்ள குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது.

ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. ரப்பர் போன்ற தனது உடம்பை கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிந்தன.

மான் கரையேறி விட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்திற்கு அருகாமையில வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்து வந்தது அந்த மான்.

சொல்லி வைத்ததுபோல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியில் கழுத்தில் மாலையாய் விழுந்தது.

"அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி ரப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றிது.

மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

"ஆமாம்.... ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது.

"இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்" என்றது.

"நான் எப்படி உதவ முடியும்?" என்றது.

"மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று நாவல் பழங்களை எடுத்து என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு" என்றது மான்.

"நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்திரவாதம்?"



"நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா.. நாவல் பழங்களை என் தாயிடம் சேர்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு".....

(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1055- தியோடாரா பைசண்டைன், பேரரசியசாக முடிசூடினாள்.

1569- முதலாது குலுக்குச் சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.

1693- சிசிலியில் எரிமலை வெடித்ததையடுத்து இடம்பெற்ற பெரும் நில நடுக்கம் சிசிலி மற்றும் மோல்ட்டாவின் பல பகுதிகளை அழிததது.

1779- மணிப்பூரில்ன் மன்னராக சிங்தாங் கோம்பா முடிசூடினார்.

1782- பிரித்தானியர், சேர் எட்வாட் ஹியூஸ் மற்றும் சேர் ஹெக்டர் மன்றோ தலைமையில் திருகோணமலையைக் கைப்பற்றினர்.

1787- யுரேனஸ் கோளின் இரண்டு துணைக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1805- மிச்சிக்கன் பிரதேசம் அமைக்கப்பட்டது.

1851- சீனாவின் குயிங் அரசிற்கொதிராக ஹொரங்க்சியூகான் என்பவர் தலைமையில் தாய்பிங்

1861- என்ற இராணுவக் குழு ஆரம்பிக்கப்பட்டது.

1879- அமெரிக்க உள்நாட்டுப்போர்: அலபாமா ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது. ஆங்கிலோ- சூளு போர் ஆரம்பமானது.

1878- பால் முதற்தடவையாக புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.

1911- *காம்ரேட்* என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மௌலானா முகம்மது அலி கல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.

1922- நீரிழிவுக்க மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது.

1942- இரண்டாம் உலகப்போர்: ஜப்பான் நெதர்லாந்தின் மீது போரை அறிவித்தது. மேலும் கோலாலம்பூரைக் கைப்பற்றியது.

1943- ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் சீனாவின் மீதான நில உரிமையை இழந்தன.

1946- என்வர் ஹோக்ஸா அல்போனீயாவின் சர்வாதிகாரியாகத் தன்னை அறிவித்து அதனைக் குடியரசாக்கினார்.

1972- கிழக்குப் பாகிஸ்தான் வங்காளதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1998- அல்ஜீரியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

2007- செயற்கைக் கோள் தகர்ப்பு ஏவுகணைச் சோதனையை சீனா நடத்தியது.

### பிறப்புகள்

1924- ரொஜர் கிலெமின் நோபல் பரிசு பெற்றவர்.

1973- ராகுல் திராவிட், இந்தியத் துடுப்பாட்டக்காரர்.

### இறப்புகள்

1932- திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்டத் தியாகி (பி.1904)

1966- லால் பகதூர் சாஸ்திரி, 3-வது இந்தியப் பிரதமர். (பி.1904)

1975- நீலாவணன், ஈழத்துக் கவிஞர் பி.1931)

1976- ஏரம்பு சுப்பையா, இலங்கையின் நடன ஆசிரியர். (பி.1922)

1983- [illegible] இந்தியத் தொழிலதிபர் [illegible]

2007- [illegible] ஈழத்துக் கவிஞர்

### யாழ்.நடனக்கலைஞர் ஏரம்பு சுப்பையா



ஏரம்பு சுப்பையா 1922 ஜனவரி 13 ஆம் திகதி பிறந்து ள்ளார். இவர், இலங்கையின் புகழ் பெற்ற பரத நாட்டியக் கலைஞரும் ஆசிரியர், கொக்குவில் கலாபவனம் நாட்டியப் பள்ளியின் அதிபருமாவார்.

ஏரம்பு சுப்பையாவின்தநதை யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த அண்ணாவியார் கதிர்காமர் ஏரம்பு. இவர் பாரம்பரியக் கலைகளில இருந்த ஈடுபாடு பகாரணமாக கூத்து வடிவத்தில் காவடி, இசை நாடகம் போன்றவற்றை நடத்தினார். அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இந்தியக் கலைஞர்களை வரவழைத்து இலங்கை முழுவதும் கலை நிகழ்ச்சிகளை நடத்தினார். ஏரம்பு அவர்கள் தனது மகனான சுப்பையாவை 1946 இல் தமிகத்திற்கு அனுப்பி பரநாட்டியத்தை திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரப்பிள்ளையிடமும் கதகளியை நடனக் கலாநிதி குரு கோபிநாத்திடமும் சீரிய முறையுடன் கற்ற வழிசெய்தார்.

இந்தியாவில் திரு சுப்பையா ஜெமினி சந்திரலேகா, சுக்ரதாரி ஆகிய திரைப்படங்களில் நடனமாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களின் நடனக் குழுவினருடன் பல்வேறு இடங்களிலும் நடனமாடி நன்மதிப்பும் பெற்றார். பின்னர், இலங்கை திரும்பி கலைப் பணிகள் செய்வதில் காலடி எடுத்து வைத்தார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண்கள் அரங்கில் ஆடக் கூடாது என்ற சமூக்க கட்டுப்பாடுகள் இருந்தநிலையில், அவற்றை உடைத்து, யாழ்.சமூகத்தினரின் புதல்வியருக்கு நடனக் கலையைக் கற்பித்து மேடையேற்றினார். அவரது இச்செயல் சமூகத்தில் ஒரு மறுமலர்ச்சி யையே கொண்டு வந்தது.

தாயகத்தில் அரங்கப் பாடசாலை நடன ஆசிரியரா முதல் நியமனம் பெற்றவரும் திரு.சுப்பையா ஆவார். நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் தனது அசியரிப் பணியைத் தொடங்கியவர், நாட்டின் பிரதான பல கல்லூரிகளிலும் நடனம் பயிற்றுவித்து சிறப்பான கலைஞர்களை எமது சமூகத்துக்கு உருவாக்கித்தந்தார்.

திருமணத்தின் பின்னர், 1956 இல் கொக்குவிலில் கலாபவனம் என்ற கலைக்கோயிலை உருவாக்கினார். தனது புதல்வி சாந்தனியையும் பெரும் நடனக் கலைஞராக ஆக்கி கலாபவனத்தை அவரிடம் கையளித்தார்.

பலநடனப்போட்டிகள், விழாக்களில் பங்குகொண்ட அவர், பல மன்றங்களினாலும் மாண்பு மிக்கோரினாலும் பொன்னாடை போர்த்தி, தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மேலும் **கலைச் செல்வன், அபிநய அரசகேசரி** என்ற பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இச்சாதனையாளர், 11.01.1976 இல் தனது 54வது அகவையில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் நட்சத்திரமாக ஜனாதிபதி மாறிக் காட்டட்டும்

## மேல் மாகாண சபை உறுப்பினர் ரஹ்மான்

பாலஸ்தீனத்தின் நட்சத்திரமாக மாறுவதை விட இலங்கை முஸ்லிம் மக்களின் நட்சத்திரமாக மாறிக்காட்டுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தான் சவால் விடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

பாலஸ்தீனத்தின் நட்சத்திரமாக மாறும் முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை முஸ்லிம்களின் நட்சத்திரமாக மாறிக்காட்ட வேண்டும்.

எனினும் இலங்கை முஸ்லிம் மக்களுக்கு அது நிறைவேறாத பகல் கனவு. ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் இலங்கை முஸ்லிம்கள் பகலில் நட்சத்திரத்தை காண்கின்றனர். அப்படியான வேலைகளை ராஜபக்ஷ அரசாங்கம் செய்துள்ளது.

பாலஸ்தீனத்தின் நட்சத்திரம் என்ற விருது வழங்கப்பட்டமை தொடர்பில் இலங்கை முஸ்லிம் மக்கள் ஆச்சரியமடைந்துள்ளனர்.

ராஜபக்ஷ அரசாங்கம் உலக முஸ்லிம் மக்களிடம் கிடைத்த கௌரவமாக இந்த விருதை காண்பிக்க முயற்சித்து வருகிறது.

அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் அடிப்படைவாத மத செயற்பாடுகள் காரணமாக இலங்கையின் முஸ்லிம் மக்கள் பீதிக்கு உள்ளாகியுள்ளனர்.

முஸ்லிம் மக்களின் வணக்கஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள் தொடர்ந்தும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதோடு மத உரிமை, வர்த்தகம் செய்யும் உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது இருந்து வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தண்டனை விதிப்பதிலிருந்து அரசு தப்பிக்க முடியாது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பதிலிருந்து அரசாங்கம் தப்பித்துக் கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை அரசாங்கம் சிரியா இஸ்ரேல் போன்ற நாடுகளின் வழியைப் பின்பற்றி செயற்பட்டு வருகிறது. எனினும், இவ்வாறு தொடர்ச்சியாக செயற்பட முடியாது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. மன்னாரில்பாரியளவில் மனித புதை குழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு காரணத்திற்காகவும் இந்தப் பகுதிகளில் மண்ணைத் தோண்டி எடுக்க முடியாது என்ற நிலைமை காணப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீரைப் பெற்றுக் கொள்வதற்காக மண்ணைத்தோண்டிய போது பாரியளவில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)



சுதுமலை வடக்கு இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இதில் விருந்தினர்களுடன் உபகரணங்களைப் பெற்ற மாணவர்கள் இருப்பதை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# ஏகாதசி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.- வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி தொடர் ந்து அதிகாலை 1.30 மணிவரை நடைபெறும். (அ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள அருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினாறு தினங்கள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையையடுத்து மாலை 6.30 மணிக்கு சுவாமி சப்பரத்தில் வீதியுலா வருவார்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சித்திர தேரில் சுவாமி எழுந்தருளி வீதியுலா வருவார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம் பெறும். (அ-2)

# சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்த நடவடிக்கைகள் பல முன்னெடுப்பு

## நீதிமன்ற கட்டட திறப்பு விழாவில் ஹக்கீம் உரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேசத்தின் அழுத்தங்களும் விமர்சனங்களும் இலங்கை அரசாங்கத்தின் மீது அதிகளவில் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மல்லாகம் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீதிமன்ற கட்டடத்தொகுதி திறப்பு விழா நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் நீதி நிர்வாக சேவையில் புதிய அத்தியாயம் இன்றிலிருந்து வடபகுதியில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மல்லாகம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மாத்திரமல்லாமல் சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேசங்களிலும் புதிய நீதிமன்றங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வெறும் கட்டடத் தொகுதி மாத்திரம் இந்த நாட்டின் நீதி நிர்வாகத்தை சரி செய்துவிட முடியாது என்பதனை நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு பொது மகன் நீதி நிர்வாகத்தைத் தேடி வருகின்ற போது அதாவது ஒரு பிணக்கிற்கு அல்லது சர்ச்சைக்கு கடைசி நடவடிக்கையாகவே நீதிமன்றத்தை நாடி வருகின்றான் என்பது நாமெல்லோரும் அறிந்த விடயம்.

இருந்தாலும் ஒரு பொது மகன் நீதிமன்றத்தை நாடுகின்ற போது அச்சத்தோடும் பீதியோடும் வருகின்ற நிலையைத் தான் நாம் பார்க்கின்றோம்.ஏனென்றால் நீதி மன்றத்தில் இருக்கின்ற சூழல் அப்படிப்பட்டது. ஆயினும் இந்த பீதியென்பது அவசியமல்லாத விடயம்.

ஆகவே அதனை நாங்கள் நீதிமன்றத்தில் ஒரு சிநேகபூர்வமான முறையில் எந்தவித பீதியு மில்லாத முறையில் பொது மக்களுடைய நீதி நிர்வாக சேவையை பெற்றுக் கொள்வதற்குரிய சூழலை அமைப்பதற்கான கொள்கை வடிவமைப்பை பிரதம நீதியரசருடைய வழிகாட்டலில் மேற் கொண்டு வருகின்றோம்.

அந்த அடிப்படையில் கோரமான யுத்தத்தின் பிடியிலிருந்து அகன்று நாங்கள் படிப்படியாக சிவில் நிர்வாத்தை இந்தப் பிரதேசங்களில் ஏற்படுத்திக் கொண்டு வருகின்ற நிலையில் அண்மையில் வடக்குமாகாண சபைத் தேர்தலை நடத்தியிருக்கின்றோம்.

ஜனநாயக ரீதியில் மாகாண ஆட்சி கை மாறியிருக்கின்ற நிலையில் ஆக்கபூர்வமாக இந்த நாட்டின் நீதி நிர்வாக சேவையை, நாட்டின் சட்டத்தின் ஆட்சியை மக்களுக்கு கொண்டு வந்து சேர்க்கும் பணியில் நாமெல்லோரும் பங்காளர்களாக இருக்க வேண்டும்.

இந்த சட்டத்தின் ஆட்சி என்கின்ற விடயம் இன்று பல கோணங்களில் விமர்சனப் பார்வையோடு பார்க்கப்படுகின்றது. நீதி நிர்வாக சேவையிலே இருப்பவர்கள் ஒரு ஜனநாயக நாட்டிலே மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் அரசியல்வாதிகளாகிய நாங்கள் நிறைவேற்றுத் துறையின் அங்கமாக அமைச்சராக இருக்கின்ற போதும் சட்டம் இயற்றுகின்ற பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற போதும் ஒரு நாட்டின் கட்டமைப்பில் முக்கியமான அம்சங்களாக இருக்கின்ற நிறைவேற்றுத் துறையில் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியிருக்கின்றது.

இந்நிலையில் நிர்வாகக் கோவைகளை பிரதம நீதியரசர் கொண்டு வர உள்ளார். அதாவது நீதிபதிகளுக்கான ஒழுக்கக் கோவை மிக விரைவில் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரசுரிக்கப்படவுள்ளது. இதனோடு சேர்த்து பலவிதமான சட்ட மூலங்களையும் அமுலுக்குக் கொண்டு வரவும் இருக்கின்றோம்.

இவ்வாறு புதிய சட்ட நியமனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த நாட்டின் சட்டத்தின் ஆட்சியை இன்றும் சிறந்த முறையில் மாற்றுவதற்கான முயற்சியில் தான் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம்.

இங்கு தற்போது சர்வதேச ரீதியாக பலவிதமான விமர்சனங்கள் எழுந்து வருகின்றது. எனவே இந்த நாட்டில் படிப்படியாக சட்டத்தின் ஆட்சி நல்ல நிலையில் முன்னோக்கிச் செல்கின்றது என்பதை எடுத்துக் காட்டும் வகையில் செயற்படுகின்ற வருடமாக இந்த புத்தாண்டில் சபதம் எடுத்துச் செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதிபதிகள், சட்டத்தரணிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறம்பைக் குளவீதியை புனரமையுங்கள்

(பூந்தோட்டம்)

வவுனியா இறம்பைக்குளம் குளவீதியை புனரமைத்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா நகரில் இருந்து 800 மீற்றர் தூரத்தில் உள்ள இவ் வீதி 2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மோசமாக பாதிப்படைந்துள்ளது.


ஆயினும் இதுவரை புனரமைப்பு செய்யப்படவில்லை,

இது தொடர்பில் வவுனியா நகரசபையிடம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையையும் அவர்கள் எடுக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிப்பதுடன் இவ் ஆண்டிலாவது பாதீட்டில் நிதி ஒதுக்கி இவ் வீதியை செப்பனிட்டு தருவதற்கு நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர். (அ-9-266)

# கடற்படையினரின் செயற்பாட்டால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

(முல்லைத்தீவு)

நாயாற்றையும் அதை அண்டியுள்ள பெருங்கடலையும் இயற்கையாகவே பிரிக்கின்ற மணற்திட்டி கடற்படையினரால் உடைக்கப்பட்டுள்ளதனால் அப்பிரதேசத்திலுள்ள மீனவர்களின் தொழில் வளம் பாதிப்படைந்தள்ளதாக மீன்வர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.




மேற்குறித்த கடலையும் ஆற்றையும் பிரிக்கின்ற மணற்திட்டி இயற்கையாகவே உருவாகி பின்னர் கடற்பெருக்கு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தானாகவே மணற்திட்டியை மேவி பாய்வது வழமை.

இந்நிலையில், கடந்த வாரங்களில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் ஆற்றின் அருகேயிருந்த படையினரின் முகாமுக்குள் மழை நீர் உட்புகுந்துள்ளதெனக் கூறி கடற்படையினர் மணற் திட்டியை உடைத்துள்ளனர்.

இதனால் அவற்றினுள் உற்பத்தியாகியுள்ள இறால்கள் உட்பட மீன்வளங்களும் கடலுடன் சேர்ந்துள்ளதால் அவ்வாற்றில் தொழிலை மேற்கொண்டு வந்த மீனவர்கள் தொழிலை இழந்துள்ளனர்.

இவ்வாற்றில் செம்மலை, செம்மலை கிழக்கு (நாயாறு), கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி, குமுழமுனை கிழக்கு, மேற்கு, மத்தி, அளம்பில் வடக்கு, தெற்கு, உப்புமாவெளி, சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, தெற்கு, வண்ணாங்குளம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீச்சுத் தொழிலாளிகள் தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

தற்போது இறால் பிடித்து தொழிலை மேற்கொண்டு முன்னேற்றும் காலகட்டத்தில் படையினர் இவ்வாறான நாசகாரச் செயலில் ஈடுபட்டமையால் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்வாதாரத் தை கொண்டு செல்ல முடியாத இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்தோடு இப்பிரதேச மீனவர்கள் இம் மாதம் தொடக்கம் ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் தொழில்வளம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி இரவு குறித்த மணற் திட்டியை படையினர் வெட்டுவதை அறிந்த மீனவர்கள் நிறுத்துமாறு கேட்டதற்கு அவர்களை படையினர் விரட்டியடித்துள்ளனர்.

இந்நடவடிக்கையால் தொழில்வளத்தை இழந்து நிற்கும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் இதற்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

# இளையோரை தெரிவு செய்தல்

(மல்லாவி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வெளிநாட்டு வேலைத்திட்டத்திற்கு இளையோரை தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி மு.ப 9மணிக்கு ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறும்.

இதற்கு 01.01.2014 ஆம் திகதி 18 தொடக்கம் 28 வயதிற்குட்பட்டவர்கள் பங்குபற்ற முடியும். இது தொடர்பாக மேலதிக தகவல்களுக்கு 0212060017, 0776178314, 0777740645 போன்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் சேவை அதிகாரி கேட்டுக் கொள்கின்றார். (அ-15-23)

# முச்சக்கரவண்டி சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலையீட்டையடுத்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டு வருடமாக பொதுக்கூட்டம் கூட்டப்படாத நிலையில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரைச் சந்தித்து முறையிட்டபோது அவர் இச் சங்கக்கூட்டத்தினை கூட்டுவதற்கு பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் ஆலோசித்தார்.

இதன்படி பொலிஸ் பொறுப்பதிகாரி கடந்த 5 ஆம் திகதி முச்சக்கரவண்டி உரிமையாளர்களைக் கூட்டி இன்றிலிருந்து தற்போதுள்ள முச்சக்கரவண்டிச் சங்கம் கலைக்கப்படுகிறது என தெரிவித்து மேற்படி திகதியில் அதிகாரிகளுக்கு முன்னிலையில் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறும் என்றும் இக்கூட்டத்திற்கு சங்கப்பதிவிலுள்ள அனைத்து முச்சக்கரவண்டி உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

இவ்விடயம் தொடர்பில் சந்திரகுமார் எம்.பியை தொடர்பு கொண்டு கேட்டபோது நாளை கூட்டம் நடத்துமாறு கோரியதாக குறிப்பிட்டார். (அ-9)




# உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு

(முல்லைத்தீவு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதி சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளாத மாணவர்களினதும் உயர்தரத்தை தொடரமுடியாமலிருக்கும் மாணவர்களினதும் நலன் கருதி இலவசமாக கணித, விஞ்ஞான, வர்த்தக, கலை பிரிவுகளுக்கு வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளது.

ஆர்வமுடைய மாணவர்களை 021 206 0017, 0777782259 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு முல்லைத்தீவுமாவட்ட இளைஞர்கழகசம்மேளன தலைவர் ச. தவசீலன் அறிவித்துள்ளார். (அ)


# கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோர்


(முல்லைத்தீவு)


நாட்டில் நிலவிய காலநிலை சீரின்மையால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 532 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 657 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எச்.டி. காமினி பிரியந்த அறிவித்துள்ளார்.

இதன்படி முள்ளிவாய்க்கால் கிழக்கில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 149 பேரும் முள்ளிவாய்க்கால் மேற்கில் 125 குடும்பங்களைச் சேர்ந்த 375 பேரும் கொக்கிளாய் மேற்கில் 103 குடும்பங்களைச்சேர்ந்த 305 பேரும் கொக்கிளாய் கிழக்கில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 160 பேரும் அம்பலவன் பொக்கணையில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 165 பேரும் கொக்குத்தொடுவாயில் 3குடும்பங்களைச் சேர்ந்த 12 பேரும் கள்ளப்பாடு தெற்கில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 126 பேரும் முல்லைத்தீவு தெற்கில் 17 குடும்பங்களைச்சேர்ந்த 60 பேரும் கள்ளப்பாடு வடக்கில் 5 குடும்பங்களைச்சேர்ந்த 11 பேரும் செம்மலை கிழக்கில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேரும் தண்ணிமுறிப்பில் 13குடும்பங்களைச்சேர்ந்த 43 பேரும் சிலாவத்தை தெற்கில் 52 குடும்பங்களைச்சேர்ந்த 212 பேரும் காலநிலை சீரின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு வீடுகள் முழுமையாக சேதமடைந்த விபரங்களின் அடிப்படையில் முள்ளிவாய்க்கால் கிழக்கு 50 வீடுகள், கொக் கிளாய் மேற்கு 83 வீடுகள், கொக்கிளாய் கிழக்கு 55 வீடுகள், கொக்குத் தொடுவாய் 3 வீடுகள் செம்மலை கிழக்கு 15 வீடுகள், தண்ணிமுறிப்பு 13 வீடுகளுமாக மொத்தம் 219 வீடுகள் சேதமாகியுள்ளன. பகுதிச் சேதங்களின்படி அம்பலவன் பொக்கணை, கள்ளப்பாடு தெற்கு பகுதிகளில் தலா ஒருவீடும் சிலாவத்தை தெற்கில் 3 வீடுகளுமாக மொத்தம் 5 வீடுகள் பகுதிச் சேதங்களுக்குட்பட்டுள்ளன. (அ-9-267)







பூநகரி பிரதேச கலைஞர்களின் வேண்டுகோளிற்கிணங்க பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடாக 3 இலட்சம் பெறுமதியான இசைக்கருவிகள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரினால் பூநகரி கலாசாரப் பேரவையிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இதில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், கலந்து கொண்டவர்களையும் இசைக்கருவிகள் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைப்பாணிக்கு செல்லும் வீதியை புனரமைக்குக

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட வன்னி விளாங்குளம் தேக்கம்காடு ஊடாக பாலைப் பாணி வரை செல்லும் வீதி அபி விருத்தி திணைக்களத்ததிற்கு சொந்தமான துடன் சேதமடைந்துள்ளதோடு இவ் வீதியின் இரு மருங்கிலும் பற்றைக்காடுகள் காணப் படுளவதால் பயத்துடன் பயணிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது

வன்னி விளாங்குளம் தேக்கம்காடு ஊடாக பாலைப் பாணி வரை செல்லும் 11 1/2 கிலோ மீற்றர் வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது

வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகள் வீதியை மறைக்கும் அளவிற்கு காணப்படுவ தால் இவ்வீதியூடாக தனியாக பயணம் செய் வோர் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் இவ்வீதி யின் அருகிலுள்ள காட்டுப் பகுதியில் பயணித்த குடும்பப்பெண்ணொருவரை அடித்து கொலை செய்து கொள்ளையிடப்பட்ட சம்பவம் நிகழ்ந் துள்ளது

இவ்வாறான வீதியினால் தினமும் பல நூற் றுக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர். யுத்தம் முடிவடைந்து மக்கள் மீள்குடி யேற றப்பட்ட போது தற்காலிகமாக சீர் செய்யப் பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பய ணிக்க முடியாதுள்ளது

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் இவ்விட யத்தில் கவனமெடுத்து விபரீத சம்பவங்கள் எதுவும் இடம் பெறுவதற்கு முன்னர் வீதியை புனரமைத்து தரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-15)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி. பிரான்சிஸ் சேவியர் எமல்டா

சுருவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் எமல்டா 6 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று பிரான்சில் கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு Cimetiere Nouveav Allee Du Souvenir Francais 95160 Montmorency France என்னும் முகவரியில் நடைபெறும்.



### நாகமுத்து கதிரவேலு

அல்லாரையைப் பிறப்பிட மாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கதிரவேலு 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை காலை 10 மணிக்கு நடைபெறும்.



### ஐயாத்துரை பாஸ்கரன்

(ஆசிரியர், யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாண த்தை வசிப்பிட மாகவும் கொண்ட ஐயாத் துரைபாஸ்கரன் 9 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.



### திருமதி. சிவபாக்கியம் பிள்ளையான்

சிறுப்பிட்டி தெற்கைப்பிறப்பிட மாகவும், மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட சிவபாக்கியம் பிள்ளை யான் 8 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.



### திருமதி. அசெம்ரா பற்குணம்

குருநகரைப் பிறப்பிடமாக வும், மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட அசெம்ரா பற்குணம் 9ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்

# அமைச்சர் யாப்பாவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பாவிற்கு நீதிமன்றம் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஹோமாகம நீதவான் வை.ஆர்.பி. நெலுந்தெனிய இந்த உத்தரவினை பிறப் பித்துள்ளார். லங்கா ஈ நியூஸ் ஊடக வியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் அமைச்சரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

லங்கா என்ற சிங்களப் பத்திரிகை ஒன் றுக்கு 2012ஆம் ஆண்டில் அளித்த செவ்வி தொடர்பில் நீதிமன்றம் விசாரணை செய்ய வுள்ளது. பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பிரியந்த கருணாரட்னவிற்கும் அழைப்பா ணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பில் ஹோமாகம நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்ன கருத்திற்காக இவ்வாறு நீதிமன்றில் விளக்கம் கோரப்படவுள்ளது என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. (அ-2)

# திருட்டுடன் தொடர்புடைய இராணுவ சிப்பாய் கைது

(மல்லாவி)

மாங்குளம் நகரப்பகுதியில் அண்மைக்கால மாக இடம்பெற்று வந்த வர்த்தக நிலையங் களை இரவு வேளைகளில் உடைத்து திருடும் சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளில் ஈடுபட்டு வந்த குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் களவாடிய பொருட்கள் சிலவற்றுடன் இரா ணுவச் சிப்பாய் ஒருவரை கைது செய்து முல்லை. மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி யுள்ளனர்

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த காலங்களில் மாங்குளம் நகரப்பகுதி யில் 4வர்த்தக நிலையங்கள் இரவு வேளை உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்ட சம்ப வங்கள் பற்றி புலன் விசாரணைகளில் ஈடு பட்டு வந்த பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை கட்டடபொருள் விற் பனை நிலைய மொன்றில் இடம்பெற்ற மூன்று இலட்சம் ரூபா பொருட்கொள்ளை தொடர்பாக இராணுவ சிப்பாய் ஒருவரை கொள்ளையிடப்பட்ட பொருட்கள் சிலவற்றுடன் கைது செய்துள்ளனர்

இப்படைச்சிப்பாய் தலைமறைவாகியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்

இக்களவு தொடர்பாக உள்ளூரைச்சேர்ந்த பலரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து புலன் விசாரணைகளை மேற் கொண்டு வந்த நிலையில் இப்படை சிப்பா யின் கைது இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப் படுகிறது (அ-9-15)






இணுவில் அறிவாலயம் எனும் நூல் வெளியீடு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட சைவப்புலவர் மு.சம்பந்தபிள்ளை உரையாற்றுவதையும் இந் நூலின் முதற் பிரதியை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனிடமிருந்து செ.சிவலிங்கம் பெறுவதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

மத்திய கிழக்கிற்கு ஆறு நாள் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று காலை நாடு திரும்பி னார்.

இந்த விஜயத்தின்போது ஜோர்தான், பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுக ளுக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டி ருந்தார்.

ஜனாதிபதியுடன் முதற் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் களான கமலா ரணதுங்க. ரொஷான் ரணசிங்க, ஜோன் அமரதுங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் விஜயம் செய்திருந்தனர். (அ-2)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறுவோருக்கு கொழும்பில் மருத்துவ சோதனை மையம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற றுச் செல்பவர்கள் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் நடவடிக்கைகளை முன்னு தாரணமாகக் கொள்வதற்கு பிலிப்பைன்ஸ் விருப்பம் தெரிவித்திருப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் கீழ், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்பவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள் ளும் மருத்துவ பரிசோதனை நிலைய மொன்று பொறளையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடந்து உரையாற்றுகையில்,

சில தினங்களுக்கு முன்னர் பிலிப் பைன்ஸ் சென்று அந்நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியி ருந்ததாகவும், இலங்கை கடைப்பிடிக்கும் நடவடிக்கைகள் குறிப்பாக 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் உள்ள தாய்மார் வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்வதைத் தடுப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கை பாராட்டப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

பிலிப்பைன்ஸ் பணியாளர்களுக்கு பயிற் சிகளை வழங்குவது தொடர்பில் இலங்கை யுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரி விக்கப்பட்டது.

அத்துடன், பயிற்சி அளிக்கப்பட்ட பணியா ளர்களை ஹொங்கொங்குக்கு அனுப்புவதற் கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்க வேலைவாய்ப்பு முகவர் நிலை யத்தின் ஊடாக பணியாளர்களை அனுப்பு வதை அந்நாட்டு தொழில்தருனர்கள் கூடு தலாக விரும்புகின்றனர் என்ற விடயத்தை ஹொங்கொங்கிலுள்ள இலங்கைக்கான கொன்சியுலர் என்னிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாம் கவனம் செலுத் தியுள்ளோம்.

அதேநேரம், வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்கள் உரிய மருத் துவ சான்றிதழ்களைப் பெற்றுச் செல்லாத தால் மூன்று, நான்கு மாதங்களில் வெளிநாடு களிலிருந்து திரும்பிவர வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவ்வா றான மருத்துவ சான்றிதழ்கள் போலியான சான்றிதழ்களாகவே வெளிநாடுகளில் பார்க்கப்படுகின்றன.

மாதமொன்றுக்கு சுமார் 25,ஆயிரம் பேர் இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்கின்றனர். வருடாந்தம் 3 இலட்சம் பேர் செல்கின்றனர். இவ்வாறு செல்ப வர்களுக்கு மருத்துவ சான்றிதழ்கள் அவசி யம். இந்த மருத்துவ பரி சோதனை நிலை யத்தின் ஊடாக குறைந்த விலையில், தர மான மருத்துவ சான்றிதழ்களைஇவர்களு க்கு பெற்றுக்கொடுக்க விருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலை யத்தின் தலைவர் சேனக அபயகுணவர்த்தன தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் குளிர் தாக்கி 8 பேர் உயிரிழப்பு

(லக்னோ)

உத்தரபிரதேசத்தில் கடும குளிருக்கு 8 பேர் பலியாகியுள்ளனர்.

உத்தரபிரதேச மாநிலத்தில் கடும்குளிர் நிலவி வருகிறது.

இந்நிலையில் வாரணாசி, பாலிலா, ஜான்பூர், பாதோகி, அசாம்கார் மற்றும் காசிபூரில் கடும் குளிருக்கு 8 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சில பகுதிகளில் கன மழையும் பெய்து வருகிறது. அங்கு மின்னல் தாக்கியதில் 5 பேர் பலியாகியுள்ளதாக அம் மாநில உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உன்னோவில் குறைந்தபட்சமாக 3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. மாநில தலைநகர் லக்னோவில் அதிகபட்சமாக 13.8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் குறைவாக 6.2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

### ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில்


# பிரித்தானியா சமர்ப்பித்த வரைவு அறிக்கைக்கு ரஷ்யா எதிர்ப்பு

**(நியூயோர்க்) சிரியாவுக்கு எதிராக ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் பிரித்தானியா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.**

சிரியா ஜனாதிபதி பஷார் அல்-அஸாத்துக்கு எதிராக கடந்த ஒரு மாதத்தில் இரண்டு முறை மேற்கத்திய நாடுகள் எடுத்த முயற்சிகளுக்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறிபபிடத்தக்கது.

சிரியாவின் அலெப்போ நகர் மீது கடந்த டிசெம்பர் மாதம் 15-ஆம் திகதி சிரியா விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் சிரியா அரசு அந்நாட்டு மக்கள் மீது



நடத்தி வரும் கொடூரமான தாக்குதல் குறித்து பிரித்தானியா தயாரித்த வரைவு அறிக்கை ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பினர் நாடுகள் முன் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கைக்கு ரஷ்யா கடந்தபுதன்கிழமை எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

மேலும் சிரியாவின் அனைத்து பகுதிகளிலும் நடைபெறும் தாக்குதல் குறித்து பொதுவான அறிக்கையை வெளியிடுமாறு ரஷயா வலியுறுத்தியது என்று இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தூதர் ஒருவர் தெரிவித்தார்.

சிரியாவில் போர் தொடங்கிய 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இதுவரை சிரியாவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 3 தீரமானங்களை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத தைப் பயன்படுத்திதடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

## தென்கொரிய ஜனாதிபதி இந்தியா வருவார்



(புதுடில்லி)

தென் கொரிய முதல் பெண் ஜனாதிபதி பார்க் கிவுன்-கியீ எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார்.

இந்தியாவில் 18ஆம் திகதி வரை சுற்றுப்பயணம் செய்கிறார். ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கேட்டுகொண்டதற்கு இணங்க இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடன் பிராந்தியம், சர்வதேச பிரச்சினைகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்துவார்.

இந்தச் சுற்றுப்பயணம் இந்தியா-தென்கொரியாவுக்கு இடையேயான நட்பை பலப்படுதும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பதவி ஏற்று கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)



சபரிமலையில் சாமி அய்யப்பனுக்கு களபாபிஷேகம் நடத்துவதற்காக, தந்திரி மகேஸ்வரர் தலைமையில் களப கலசத்தை கையில் ஏந்தியவாறு மேல்சாந்தி நாராயணன் நம்பூதிரி பூசாரிகளுடன் ஸ்ரீகோவிலை வலம் வந்தபோது...

### விமான நிலையங்களில்

## குண்டுதுளைக்காத கண்ணாடி கூண்டுகள்

(சென்னை)

சென்னை உள்நாட்டு விமான நிலையம் மற்றும் பன்னாட்டு விமானநிலையங்களில் குண்டுதுளைக்காத கண்ணாடி கூண்டுகள் அமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்துக்கு கடந்த 3 மாதத்துக்கு முன்பு தீவிரவாதிகளின்மிரட்டல் வந்தது. இதையடுத்து உஷாராக இருக்கும்படி உளவுத்துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனால் விமான நிலையத்தில் 9 வகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விமான நிலையத்தில், தினமும் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தி வந்தனர். மோப்ப நாய் மூலமும் சோதனை நடத்தப்பட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கையாக சென்னை உள்நாட்டு விமான நிலையம் மற்றும் பன்னாட்டு விமானநிலையத்தில் குண்டுதுளைக்காத கண்ணாடி கூண்டுகள் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி விமான நிலையத்தின் வருகை மற்றும் புறப்பாடு நுழைவு வாசலில் 8 இடங்களில் குண்டுதுளைக்காத கண்ணாடி கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த கண்ணாடி கூண்டுக்குள் அமர்ந்து மத்திய தொழில் பாதுகாப்புபடை பொலிஸார் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். (2)

# நீதிமன்றிற்கு சர்தாரி ஆஜர்

(இஸ்லாமாபாத்)

இலஞ்ச தடுப்பு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சர்தாரி நேரில் ஆஜரானார்.

இதனை முன்னிட்டு நீதி மன்றவளாகத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. அதன்பின்னர் வழக்கு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டது.

நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய போது சர்தாரி சிரித்த முகத்துடன் காட்சிதந்தார். நீதிமன்றத்திற்கு வெளியே கூடி நின்ற பாகிஸ்தான் மக்கள் கட்சி தொண்டர்களை பார்த்து அவர் கை அசைத்தார்.



சர்தாரி சார்பில் வக்கீல்கள் பரூக் நயிக், அம்ஜாத் இக்பால் ஆகியோர் ஆஜரானார்கள். இந்த வழக்கு பற்றி பரூக் நயிக் கூறுகையில், 'சர்தாரி மீது எந்த குற்றச் சாட்டும் பதிவு செய்யப்பட வில்லை' என்றார். அம்ஜாத் இக்பால் கூறும்போது, குற்றச் சாட்டு முகாந்திரம் குறித்து அடுத்த வசாரணையின் போது விவாதிக்க இருக்கிறோம் என்றார். (2)

## 40 தமிழக மீனவர்களின் காவல் நீட்டிப்பு

(சென்னை)

இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 40 தமிழக மீனவர்களின் காவல் எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 30ஆம் திகதி இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட பாம்பன் பகுதியைச் சேர்ந்த 18 மீனவர்களும், டிசெம்பர் 29 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த 22 பேரின் காவலும் நேற்றுடன் நிறைவு பெற்றது.

இதையடுத்து 40 தமிழக மீனவர்களின் காவலையும் இலங்கை நீதிமன்றம் எதிர் வரும் 24 ஆம் திகதி வரை நீட்டித்துள்ளது. (2)


## தேவயானி இந்தியா திரும்புகிறார்

தேவயானிக்கு அமெரிக்கா முழு தூதரக விதி விலக்கு அளித்து சட்டபாதுகாப்பு வழங்கியுள்ளதால் ஜி1 விசா கிடைத்துள்ளது. எனவே அவர் நேற்று இந்தியா திரும்பியுள்ளார். தேவயானி மீதான வழக்கு விசாரணை நாளைமறுதினம் நியூயோர்க் நீதிமன்றில் நடைபெறுவதாக இருந்தது.

இந்த விசாரணையை தள்ளி வைக்க வேண்டும் என்று நியூயார்க் நீதிமன்றில் தேவயானி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த கோரிக்கையை ஏற்க மறுத்து மனுவை நீதிபதி தள்ளுபடி செய்துவிட்டார்.

இதற்கிடையே, இந்த வழக்கில் 'திடீர்' திருப்பம் ஏற்பட்டுள்ளது.

அதாவது, இந்தியாவின் கோரிக்கையை ஏற்று தேவயானிக்கு இந்த வழக்கில் இருந்து அமெரிக்கா முழு தூதரக விதிவிலக்கு அளித்து சட்ட பாதுகாப்பு வழங்கியுள்ளது.



இது தொடர்பான கடிதத்தை அமெரிக்க அட்டர்னி ஜெனரல் பிரீத் பாரரா மாவட்ட நீதிபதி ஷிரா ஷெயிண்ட்லினுக்கு அனுபபிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதை தொடர்ந்து பெண் ஊழியர் சங்கீதா ரிச்சர்ட்டுக்கு விசா வாங்க மோசடி செய்தல் மற்றும் அதற்காக பொய் தகவல்கள் கொடுத்தல் என்ற 2 குற்றச்சாட்டுகள் தேவயானி மீது பதிவு செய்யப்பட்டன. மேலும் அவர் அமெரிக்காவில் இருந்து இந்தியா செல்ல அனுமதியும் வழங்கப்பட்டது.

இது குறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேவயானிக்கு அமெரிக்கா முழு தூதரக விதிவிலக்கு அளித்து சட்ட பாதுகாப்பு வழங்கியுள்ளதால் ஜி1 விசா கிடைத்துள்ளது.

எனவே, அவர் இந்தியா திரும்புகிறார் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கிடையே இந்தியா புறப்படும் முன் நியூயோர்க விமான நிலையத்தில் தேவயானி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பொய்யானது. மறறும் ஆதாரமற்றது. நான் நிரபராதி என்பதை நீதிமன்றில் நிருபிப்பேன் என்றார்.

இதேவேளை தேவயானி இந்தியா திரும்பினாலும் அவர மீதான வழக்கு விசாரணை அமெரிக்காவில் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி ஒரு நாளும் உண்மையாகாது. வேடம் கலைந்தால் அதனுண்மை தெரிந்து விடும் ~ சத்திய சாயி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உங்களுடைய சிவனுக்கும் எங்களுக்கும் தலைவிதி ஒன்றுதான்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29–வது பட்டமளிப்பு விழா நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது.

மங்கல வாத்தியம் முழங்க குடை ஆலவட்டம் சகிதம் வேந்தர், துணைவேந்தர் உள்ளிட்ட பட்டமளிப்பு விழா விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மங்கல வாத்தியம் இசைக்க, பட்டுக்குடையும் ஆலவட்டங்களும் அலங்கரிக்க, பட்டமளிப்பு விழா ஆரம்பமான காட்சி கண்டு அனைவரும் வியந்தனர்.

மேடை அமைப்பு, பார்வையாளர்களையும் விருந்தினர்களையும் ஒழுங்குபடுத்திய முறைமை என அனைத்துமே மிகவும் சிறப்பாக ஏற்பாடாகி இருந்தன.

பட்டமளிப்பு விழா நடந்த கைலாசபதி கலை அரங்கில் பார்வையாளர் வரிசையில் இருந்த போது, கல்விக்கு நடக்கும் பெருவிழாப் போன்ற மன உணர்வு எம் நெஞ்சை நெகிழ வைத்தது.

பட்டமளிப்பு விழாவின் ஒரு அமர்வு முடிந்து வெளியில் வந்தபோது ஒரு மாணவன் சேர் என்று அழைத்தான்.

எப்படி, சுகமாக இருக்கிறீர்களா? என்று வினவினான்.

ஓமோம் நல்ல சுகம். நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டேன்.

நான் கப் கலக்சன்( cup collection)செய்கிறேன் என்றான்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்த கோஸை(கற்கைநெறி) எந்த ஆண்டு அறிமுகப்படுத்தினார்கள் என்று கேட்டேன்.

யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பமான போதே இந்தக் கோஸ் ஆரம்பமாகிவிட்டது என்றான் அவன்.

அப்படியா! பட்டமளிப்பு புத்தகத்தில் இந்தக் கப் கலக்சன் கோஸைப் பற்றி– அதில் சித்தியடைந்தவர்களைப் பற்றி எந்த விபரமும் இல்லையே என்றேன்.

சேர்! பட்டமளிப்பு உள்ளகமாக நடப்பது. இது வெளியகமாக நடப்பது. அதனால் இந்தக் கோஸ் பட்டமளிப்பு புத்தகத்தில் இடம்பெறுவதில்லை.

அதென்ன? உள்ளகம், வெளியகம் என்றேன்.

பட்டமளிப்பு விழா கைலாசபதி கலை அரங்கில் நடக்கும் அது உள்ளகம். கப் கலக்சன் பல்கலைக்கழக வளாகத்தில் நடக்கும் இது வெளியகம்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை என்று கூற, அதெல்லாம் புரிய வேண்டிய அவசியம் இல்லை சேர் என்று கூறிய அந்த மாணவன்; தொப்பி ஒன்றை நீட்டி இதற்குள் காசைப் போடுங்கள் என்றான். ஏன்? என்று கேட்டேன். பல்கலையில் இதுவும் ஒரு கலைதான் என்று அவன் கூறி முடிப்பதற்குள் சுமார் பத்து மாணவர்கள் அந்த இடத்தில் திடீர் எனப் பாய்ந்து வந்து தத்தம் கைகளில் வைத்திருந்த தொப்பிகளை நீட்டினர்.

எனக்கோ பெரும் சங்கடமாய்ப் போயிற்று. அதில் இருந்து விடுபடும் பொருட்டு, மக்காள் இதெல்லாம் சரியில்லை என்றேன்.

ஏன்சேர் என்றான் ஒரு மாணவன். இதற்கு விளக்கம் கொடுக்க முற்பட்ட போது, இன்னொரு மாணவன் சொன்னான்;

சேர், உங்கட சிவனும் பிச்சாபாத்திரம் ஏந்தினவரல்லோ. அது போலதான் இதுவும். சுருங்கச் சொன்னால் உங்கட சிவனுக்கும் எங்களுக்கும் தலைவிதி ஒன்றுதான். ஒரு சிறிய வித்தியாசம் அவர்கையில் மண்டையோடு; எங்கள் கையில் தொப்பி அவ்வளவுதான் என்றான்.

பரமேஸ்வரா! நீயே துணை என்றவாறு பார்வதி பரமேஸ்வரன் வீற்றிருக்கும் ஆலயத்தை நோக்கினேன்.

# புதிய நிறுவனத்தினூடாக ஹலால் சான்றிதழ் வழங்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் இலங்கை கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு 27 நாடுகள் இதனை அங்கீகரித்துள்ளதாக ஹலால் அங்கீகார நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டு நிலைமையையும் சமூக அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு ஹலால் சான்றிதழ் வழங்கும் பொறுப்பை ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் உலமா சபை, புதிதாக உருவாக்கப்பட்ட இலாப நோக்கமற்ற தனியார் நிறுவனமொன்றிடம் கையளித்தது.

உலகில் வர்த்தகம் மேற்கொள்ள ஹலால் சான்றிதழ் இன்றியமையாததாக இருப்பதாகவும் இலங்கை உற்பத்திகள் சர்வதேச தரம் வாய்ந்தது என அடையாளம் காண இச்சான்றிதழ் அவசியமானது எனவும் இந்த நிறுவனம் தெரிவித்தது.

இது தொடர்பில் ஹலால் அங்கீகார உத்தரவாதமளிக்கப்பட்ட நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில,

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கையின் நிறுவனங்களுக்கான ஹலால் சான்றிதழ்களை விநியோகிக்கும் பொறுப்பு ஹலால் சான்றுறுதி பேரவையிடம் உத்தரவாதமளிக்கப்பட்ட நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிறுவனங்களின் 2007 7ஆம் பிரிவின் சட்டத்தின் கீழ் இப்பேரவை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய உலகில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஹலால் சான்றிதழ் முக்கியமானதாகும். இலங்கை நிறுவனங்கள் தமது உற்பத்திகளை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதற்கு இது ஒரு முக்கிய சர்வதேச சான்றாக பின்பற்றப்படுகிறது.

SLS மற்றும் ISO சான்றுகளை போன்றே ஹலால் நிறுவன சான்றும் ஒரு சர்வதேச தரச் சான்றாகும். அத்துடன் எமது உள்விவகார நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுகள் சர்வதேச நிறுவனத்தால் மதிப்பிடப்படுகின்றது என ஹலால் அங்கீகார நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி அலி பதார் அலி குறிப்பிட்டுள்ளார்.

இத்தரச் சான்று உணவு, குடிபானம் மற்றும் பாவனை பொருட்கள் போன்றவற்றின் ஹலால் தரத்தை உறுதிப்படுத்தும், ஒரு விடயமாகும். அத்துடன் இத்தரச் சான்றுடன் சம்பந்தப்பட்ட விஞ்ஞான ரீதியான செயற்பாடுகளில் அனுபவம் வாய்ந்த தேர்சசி பெற்ற தொழில்நுட்ப குழு ஹலால் அஙககார நிறுவனத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஹலால் சான்றுறுதி பேரவையானது இலாபமற்ற இலங்கையின் முக்கிய துறைசார்ந்தவர்களின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு சர்வதேச தரங்களின் அடிப்படையில் மார்க்க வழிகாட்டலின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பாகும்.

நாட்டில் இந்த சான்றிதழுக்கு அதிக தேவை நிலவுகின்றது. உள்ளூர் ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பொருட்களை சந்தைப்படுத்தும் சுமார் 195 இலங்கை நிறுவனங்கள் இந்த சான்றிதழை கோரியுள்ளன. நாங்கள் அதற்கான ஏற்பாடுகளை தற்போது துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றோம என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்தில் திருட்டு

(கிளிநொச்சி)

பரந்தன் சந்திப் பகுதியில் அமைந்துள்ள வாகன உதிரிப்பாகங்கள் விற். பனை நிலையமொன்றில் காசு உட்பட பொருட்களும் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஆட்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் குறித்த உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்தின் மேற் கூரையை கழற்றி உள்நுழைந்த திருடர்கள் 35 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளி நொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-4-9)

# இராமகிருஷ்ண மிஷனில் விசேட பணிகள்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை இல.17, மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் விசேட பணிகள் பல முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.30 முதல் முற்பகல் 11.30 வரை அறநெறி வகுப்புக்களும் திங்கள் முதல் வெள்ளிவரை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இலவசக் கல்வி வகுப்புக்கள் நடைபெறவுள்ளதுடன் சனிக்கிழமைகளில் காலை 8 மணிமுதல் 12 மணி வரையும் பிற்பகல் 5 மணி தொடக்கம் 5.30 வரை மேற்படி வகுப்பு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஆண்களுக்கு மட்டும் இலவச யோகாசன வகுப்புக்கள் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30முதல் 8 மணிவரை நடைபெறுமென நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எஸ். சிவமோகன் அறிவித்துள்ளார். (அ-9)

# தாய் வெற்றிலை உண்டால் குழந்தைகளுக்கு ஆபத்து

(கொழும்பு)

கர்ப்பம் அடைந்திருக்கும் காலத்தில் வெற்றிலை பாக்கு உண்ணும் பழக்கத்தை கொண்ட பெண்களுக்கு நிறை குறைவான குழந்தைகள் பிறப்பதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது என சிறுவர்களின் நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரோ தெரிவித்துள்ளார்.

எடை குறைவு மற்றும் உயரம் குன்றிய பிள்ளைகள் பிறப்பதால் அந்த பிள்ளைகளுக்கு பல நோய்கள் ஏற்படுகின்றன.

இப்படி பிறக்கும் குழந்தைகளுக்கு உயர் இரத்த அழுத்தம், குளிரை தாங்கிக் கொள்ள முடியாமை, நோய் எதிர்ப்பு சக்திஎன்பனகுறைந்துகாணப்படுகின்றன.

மலையக தோட்டங்கள் மற்றும் கரையோர பிரதேசங்களில் வாழும் பெண்கள் வெற்றிலை உண்ண பழகியுள்ளதால் அவர்களின் குழந்தைகளே இவ்வாறான பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

சுண்ணாம்பு, புகையிலை மற்றும் பாக்கு ஆகியவற்றில் இருக்கும் இரசாயனம் காரணமாக குழந்தைகளுக்கு நோய்கள் ஏற்படுகின்றன என்றார்.

இதேவேளை தொற்று நோய் அல்லாத நோய்கள் காரணமாக மரணமடையும் ஆயிரம் இலங்கையர்களில் சுமார் 600 பேர் புகைத்தல் காரணமாக ஏற்படும் நோய்களில் இறப்பதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடாந்தம் 20 ஆயிரம் இலங்கையர்கள் புகைத்தல் காரணமாக உயிரிழந்து வருகின்றனர்.

இந்த ஆபத்தான நோயில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் எதிர் வரும் 13–ம் திகதி முதல் நாடு முழுவதும் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட உள்ளது.

புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணிகள் கொழும்பிலும் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



கர்மா என்பதும் ஒரு மாயை. இந்த உண்மையை உணர்ந்துவிட்டால் கர்மா உங்களை நெருங்காது. கர்மா உள்ளது என்ற மாயை உள்ளவரை அது செயற்படும். உண்மையில் கர்மா என்று ஒன்று இல்லை. அது வெறும் மாயை என்று உணர்ந்துவிட்டால் கர்மா உங்களைப் பாதிக்காது. ஆனால் இது உங்களுக்கு அனுபவமாகியிருக்க வேண்டும். வெறும் வார்த்தைகள் பயன் தராது.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்


## வலிமையே வாழ்வு



- பலன் கருதாமலும், சுயநலம் சிறிதும் இல்லாமலும் கடவுளிடம் பக்தி செலுத்துவதே சிறந்தது.
- நீங்கள் எதை நம்புகிறீர்களோ, அதுவாகவே மாறி விடுவீர்கள்.
- வலிமையே வாழ்வு. பலவீனமே மரணம். மிகப்பெரிய உண்மை இது தான்.
- தீமையிலிருந்தும் மனிதன் வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினையைப் பெறுகிறான்.
- சில நேரத்தில் இன்பத்தை விட, துன்பமே நமக்கு சிறந்த ஆசிரியராக விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ரீதியிலான சதுரங்கப் போட்டி -2013



## முடிவுகள்

வடமாகாண ரீதியாக 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற சதுரங்கப் போட்டி முடிவுகள்.

8 வயதுப் பிரிவு ஆண்கள்

முதலாமிடம் ஜெ.ஆரகன் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), இரண்டாமிடம் எஸ்.ஆர்த்திகன் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), மூன்றாமிடம் வை.ஆர்நிகன் (யாழ்.நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை).

8 வயதுப் பிரிவு பெண்கள்

முதலாமிடம் எஸ்.ஆரபி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் என்.நிவேதா (யாழ்.தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் பி.நதுசா (யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

10 வயதுப் பிரிவு ஆண்கள்

முதலாமிடம் பி.மனோஜ் (யாழ்.நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை), இரண்டாமிடம் எம்.அனுதர்ஷன் (யாழ்.நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை), ஜெ.விஷ்ணுராஜ் (யாழ்.தம்பசிட்டி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை).

10 வயதுப் பிரிவு பெண்கள்

முதலாமிடம் கே.திலக்ஷனா (யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் ஜெ.துஷியந்தி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாமிடம் என்.இந்துஜா (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்).

12 வயதுப் பிரிவு ஆண்கள்

முதலாமிடம் ஆர்.தனுசன் (யா/ஹாட்லி கல்லூரி), இரண்டாமிடம் எஸ்.சுமன் (உடுப்பிட்டி அஅமரிக்கன் மிசன் கல்லூரி), மூன்றாமிடம் ஏ.கஜராஜ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

12 வயதுப் பிரிவு பெண்கள்

முதலாமிடம் எஸ்.மிருதி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), இரண்டாமிடம் பி.கம்ஷாகினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), மூன்றாமிடம் ஏ.அஷாரிகா(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

(தொடரும்....)

# தெல்லிப்பழை மகாஜனாவை வென்றது கொக்குவில் ஏ.பி. விளையாட்டுக் கழகம்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான நட்புறவு ரீதியான கடினப் பந்து கிரிக்கெட் போட்டியொன்று அண்மையில் இடம்பெற்றது.

இப் போட்டியானது தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் நாணயற்சுழற்சியில் வென்ற கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழக அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழக அணி 27.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழக அணி சார்பில் ராகுலன் 82 ஓட்டங்களையும், உத்தமன் 15 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பாக டிலோஷன் 3 விக்கெட்டுக்களையும், ரமேஷ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

154 என்னும் வெற்றி இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி டிலோஷனின் அரைச்சதத்தின் உதவியுடன் 18.5 ஓவர்களில் வெற்றி இலக்கினை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பாக டிலோஷன் 55 ஓட்டங்களையும், சாரங்கன் 36 ஓட்டங்களையும், ஜனந்தன் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழக அணி சார்பில் சிலோஜன் 2 விக்கெட்டுக்களையும், ராகுலன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். (க-23)

# கபடி, எல்லே போட்டிகள்

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி, எல்லே போட்டிகள் இன்று சனிக்கிழமை புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட போட்டிகள் என்பன நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன என போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (இ)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தைப்பொங்கலை முன்னிட்டு; இளைஞர் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி



சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் “தைப்பொங்கலை” முன்னிட்டு வருடாந்தம் நடத்தி வரும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இவ் வருடமும் இடம்பெறவுள்ளன.

வட மாகாண ரீதியில் இடம்பெறவுள்ள இச் சுற்றுப் போட்டியில் 50 அணிகள் பங்கு கொள்கின்றன.

அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக இப் போட்டிகள் அமையவுள்ளன.

இதில் ஏ குழுவினரிற்கான போட்டிகள் இன்று சனிக்கிழமையும், பீ குழுவினரிற்கான போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் காலை 7.30 முதல் ஆரம்பமாகி, இடம்பெறவுள்ளன.

இறுதிப் போட்டியும் அரையிறுதிப் போட்டிகளும் பொங்கல் (14) தினத்தன்று இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழுங்கப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகம் தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (க-23)

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் தொடர்ந்து டோனி, ரெய்னா, அஷ்வின், ஜடேஜா, பிராவோ

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 7ஆவது பருவ காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் ஐந்து வீரர்களைப் புதிய ஆண்டிற்கும் தக்க வைத்துக் கொள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முடிவு செய்துள்ளது.

அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி, சுரேஷ் ரெய்னா, இரவிச்சந்திரன் அஷ்வின், இரவீந்திர ஜடேஜா, டுவைன் பிராவோ ஆகியோரே சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டுக்கான இந்தியன் பிறீமியர் லீக் ஏலம் பெப்ரவரி 12ஆம் திகதி இடம்பெறவுள்ள



நிலையிலேயே அணிகள் தாங்கள் தக்க வைத்துக் கொள்ளும் வீரர்களை அறிவித்து வருகின்றன. ஒவ்வோர் அணியும் அதிகபட்சமாக தலா ஐந்து அணிகளைத் தக்க வைத்துக்





கொள்ள முடியும் என்பதோடு அந்த 5 வீரர்களும ஏலத்தில் உள்ளடக்கப்படமாட்டார்கள்.

இந்த நிலையிலேயே சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மகேந்திரசிங் டோனி, சுரேஷ் ரெய்னா, இரவிச்சந்திரன் அஷ்வின், இரவீந்திர ஜடேஜா, டுவைன் பிராவோ ஆகியோரைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இவர்களைத் தவிர, இன்னும் ஒரு வீரரை அவ்வணி ஏலத்தின் போது கைப்பற்றிக்





கொள்ளக்கூடியதாக அமையும். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக விளையாடிய ஒரு வீரரை இன்னோர் அணி ஏலத்தின் போது வாங்கிய பின்னர் அந்த ஏலம் உறுதிப்படுத்தப்பட்டதும் குறித்த வீரரை அவ்வணி வாங்கிய அதே தொகையைச் செலுத்தி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமையும்.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் அதிக வெற்றிகரமான அணியான சென்னை சுப்பர் கிங்ஸ். இதுவரை இடம்பெற்ற 6 இந்தியன் பிறீமியர் லீக் தொடர்களில் 5 தொடர்களின் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றதோடு 2 தடவைகள் சம்பியன் பட்டத்தை வென்றிருந்தது. (க)

# செலான் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

செலான் வெற்றிக் கிண்ணம் காற்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

நெல்லியடி செலான் வங்கி அனுசரணையுடன் பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் செலான் வெற்றிக்கிண்ண காற்பந்தாட்டத் தொடர் கடந்த 4 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

விலகல் முறையில் நடைபெற்றுவரும் இப் போட்டித் தொடர் வதிரி டயமன்ஸ் மற்றும் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியில் முதலாவது காலிறுதிப் போட்டியில் டயமன்ஸ் அணியை எதிர்த்து சென்.சேவியர் அணி மோதவுள்ளது.

தொடர்ந்து நடைபெறவுள்ள மற்றொரு காலிறுதிப் போட்டியில் வல்வை அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது காலிறுதிப் போட்டியில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணியும் தொடர்ந்து [illegible] றுதிப் போட்டியில் [illegible] அணியை எதிர்த்து [illegible] அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மென்பந்து சுற்றுப் போட்டி

இருபாலை விக்றி விளையாட்டுக்கழகத்தின் 8 பேர் 7 ஓவர் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் அணிகள் 077-4665826 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம் வாழ்க்கையிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும்

## தெல்லிப்பளை பிரதேச செயலாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கிவாழ்ந்துவரும் தமிழ்மக்களை அகதிவாழ்க்கையிலிருந்து விடுவிக்க நடவடிக்கையெடுக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீமோகன் இராணுவ கட்டளைத்தளபதியிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இதேவேளை நலன்புரி முகாம்களில் தங்கிவாழ்ந்து வரும் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் அதுவே ஜனாதிபதியின் விருப்பமும் என்று இராணுவ கட்டளைத்தளபதி உறுதியளித்தார்.

யாழ்.மல்லாகம் பகுதியிலுள்ள கோணாப்புலம் நலன்புரி நிலையத்தில் தங்கிவாழ்ந்து வரும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்கள் 100 பேருக்கு கல்வி ஊக்கத் தொகையாக தலா 500 ரூபா வங்கிப்புத்தகத்தில் வைப்பிட்டு நேற்று மாலை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதியாக நேற்றைய தினம் பொறுப்பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு வங்கிப்புத்தகத்தை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது பிரதேச செயலாளர் தெரிவிக்கையில்,

எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதை இந்த சிறிய நிகழ்வு எடுத்து காட்டியுள்ளது. இடம்பெயர்ந்த எமது தமிழ்மக்கள் அகதிமுகாம் வாழ்க்கையைவிட்டு நிரந்தர வாழ்க்கையை தமது சொந்த நிலத்தில் வாழ நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாம் எப்பொழுதும் உதவி செய்யத் தயாராகயிருக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வு நிறைவடைந்ததும் குறித்த முகாம் மக்கள் இராணுவக் கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடினர். இதன்போது தமது நிலைமையை எடுத்துக்கூறினர். இதனையடுத்து கருத்து தெரிவித்த இராணுவத் கட்டளைத்தளபதி நலன்புரி நிலையத்தில் தங்கிவாழ்ந்து வரும் மக்களை மீள்குடியேற்ற வேண்டும் என்பதுதான் ஜனாதிபதியின் விருப்பமும் எனவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## புடைவை வியாபாரிகளிடம் கப்பம் பெறும் ரவுடிக் கும்பல்

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் அதிக காலமாக புடைவை வியாபாரிகளிடம் மிரட்டி கப்பம் பெற்ற சம்பவம் ஒன்று அம்பலமாகியுள்ளது.

யாழ்.முனியப்பர் கோவிலில் உள்ள முஸ்லிம் புடைவை வியாபாரிகளிடம் இளைஞர் குழு ஒன்று அதிக காலமாக மிரட்டி கப்பம் பெற்று வந்துள்ளது.

இக் குழுவினர் முனியப்பர் கோவிலில் வியாபாரம் செய்யும் ஓட்டுமடத்தினை சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரையும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கப்பம் கேட்டு கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதில் குறித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை கண்டித்து நேற்று அதிகாலை முஸ்லிம் புடைவை வியாபாரிகள் கண்டப்பேரணி ஒன்றையும் நடத்தி யாழ்.பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளனர்.

இக் குழுவினர் அதிக காலமாக மதுபோதையில் தம்மை மிரட்டி கப்பம் பெறுவதாக வியாபாரிகள் குற்றம் சாட்டினர்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-4)

## பளைவரை...

யில் எதிர்வரும் 15ஆம் திகதி பளைவரை பரீட்சார்த்த பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் வடக்கு ரயில் பாதை புனரமைப்புப் பணிகளில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதை புனரமைப்புக்கு ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரையான ரயில் சேவையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து மீதி இடங்களுக்கான ரயில் பாதை புனரமைக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது எழுதுமட்டுவாழ்வரை முடிவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை 2014ஆம் ஆண்டு முற்பகுதிக்குள் ரயில் சேவை யாழ்பபாணம் வரை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பகல் வேளை திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டில் ஆள் இல்லாத சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உள்நுழைந்த திருடர்கள் தமது கைவரிசையை காட்டிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் சீக்காவயல் சித்தன்கேணி என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் 10 ஆயிரம் ரூபா பணமும் பல ஆயிரம் ரூபா இலத்திரனியல் பொருட்களும் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வட்டுக் கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-17)

## வாள் செய்தவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டு,கொள்ளை, கொலை, ஆட்கடத்தல், கட்டப்பஞ்சாயத்து மோசடி என பல சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட ஆவா கும்பலுக்கு வாள்கள் செய்து கொடுத்த ஒருவரை கோப்பாய் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு வாள் வெட்டு மற்றும் அடிதடி தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட 15-க்கும் மேற்பட்டோரை கடந்த வாரம் கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களுக்கு வாள் செய்து கொடுத்த ஒருவரை கோப்பாய் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

மற்றும் இவர்களோடு தொடர்புபட்ட அனைவரையும் கைது செய்யதேடுதல் வேட்டை நடத்தியுள்ளனர். (எ-4)

## தெல்லிப்பழை மகாஜன வெற்றி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான நட்பு ரீதியான கடினப் பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் இடம் பெற்றது.

இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இன்றைய வலம்புரியின் 18-ம் பக்கத்தில் கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது என தவறுதலாக தலைப்பிடப்பட்டு உள்ளது திருத்தி வாசிக்கவும். (கு)

## பதவி விலக...

அமைச்சர் பதவியில் இருந்து விலகப் போவதில்லை என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார.

சில பௌத்த பிக்குமாரின் எதிர்ப்பு காரணமாக பிரதமர் தனது புத்த சாசன அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய உள்ளதாக வெளியான தகவல் குறித்து பதிலளிக்கும் போதே பிரதமர் அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைக் குறிப்பிட்டார்.

டி.எம்.ஜயரத்னவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கும் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும இந்த தகவல் முற்றிலும் பொய்யானது என அந்த பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பிரதமருக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், தற்போதைய பிரதமர் டி.எம். ஜயரத்னவை அந்த பதவியில் இருந்து நீக்கிவிட்டு, ஜனாதிபதியின் சகோதரரான சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்கத திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மன்னார்...

இராயப்பு ஜோசப் ஆண்டகை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஈழவாதி என்பது நாட்டுக்கு இரகசியமான விடயமல்ல.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைகளத்தின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசேட பிரதிநிதி ஸ்ரீபன் ஜே.ராப்பிடம் போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களை பயன் படுத்தியதாக மன்னார் ஆயர் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினர் நடத்திய இரசாயன ஆயுத தாக்குதலில் பொது மக்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்த வந்த மக்கள் தன்னிடம கூறியதாகவும் ஆயர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் ஆயர் இலங்கை இராணுவத்திற்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ளமை இது முதல் முறையல்ல.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை கேடயமாக வைத்திருந்தமை, மடு மாத சொரூபத்தை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு சென்று வைத்திருந்தமை தொடர்பில மன்னார் ஆயர் இதுவரை தனது வாயால் வார்த்தைகள் எதனையும் வெளியிடவில்லை.

தமது கட்டளையின் கீழ் மக்களை பயங்கரவாத ஆட்சியின் கீழ் வைத்திருந்த விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை இராணுவத்தினரே பாதுகாப்பாக காப்பற்றினர்.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழும் நிலைமையை ஏற்படுத்திய இராணுவத்தினருக்கும் புண்ணியம் கிடைக்க வேண்டும்.

போர் நடைபெற்ற காலத்தில் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி மக்களையும் இராணுவத்தினரையும் ஆபத்துக்கு உள்ளாக்கியது விடுதலைப் புலிகள்தான் என்பதை மன்னார் ஆயர் அறியாதவர் அல்ல.

பயங்கரவாதத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்ட இலங்கை இராணுவம் ஒழுக்கமான சட்டரீதியான இராணுவம் என்பது உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

பிரபாகரனின் நிழலாக மாறியுள்ள மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இராணுவத்தினர் மீது சுமத்தியுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களை வன்மையாக கண்டிப்பதுடன் அதற்கு எதிர்ப்புகளையும் வெளியிடுகிறோம்.

நாட்டின் ஒருமைப்பாடு, இறையாண்மையை ஆபத்தில் தள்ளும் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தேசத்துரோக, தமிழ் இனவாத, பிரிவினைவாத, பயங்கரவாத சார்பான செயற்பாடுகள் மற்றும் கருத்துக்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தி கேட்டுக கொள்கிறோம் என வர்ணசிங்க தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## யாழ்.இராணுவ...

இந்நிகழ்வில் உரையாற்றிய இராணுவத்தளபதி,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கை காரணமாக வெளியேற்றப்பட்ட மக்கள் படிப்படியாக மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். அத்தோடு விடுதலைப்புலிகளினால் யாழ். மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களையும் மீள்குடியேற்றி வருகின்றோம் என்றும் 90 வீதம் மீள்குடியேற்றம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது .

யாழ்.மல்லாகம் பகுதியிலுள்ள கோணாப்புலம் நலன்புரி நிலையத்தில் தங்கிவாழ்ந்து வரும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 100 பேருக்கு கல்வி ஊக்கத்தொகையாக தலா 500 ரூபா வங்கிப்புத்தகத்தில் வைப்பிட்டு நேற்று மாலை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதியாக நேற்றைய தினம் பொறுப் பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு வங்கிப்புத்தகத்தை வழங்கி வைத்தார். (எ-6)

## புகைப்படத்தை...

நிபுணர் ஸ்ரீபன் ஜே.ராப்பும் அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிசனும் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் பாடசாலை மைதானத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதியில் இலங்கை இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு நூற்றுக் கணக்கான பொதுமக்களை கொன்று குவித்ததாக அமெரிக்காவின் சமூக வலைத்தளத்தில் புகைப்பட ஆதாரத்துடன் செய்தி வெளியாகியிருந்தது.

இந்த புகைப்படத்துடனான செய்தி தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திடம் விளக்கம் கோரப்படும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி கருணாதிலக்க அமுனுகம தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்கத் தூதரகம் இவ்வாறு அறிவித்துள்ளது. (எ-11)

## மரண அறிவித்தல்

### அமரர் மாரிமுத்து பசுபதி



மாவை கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் மல்லாகம் நீதிமன்ற வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பசுபதி 10.01.2014 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரம் மாரிமுத்துவின் அன்பு மனைவியும் வரதராசா(ப.தெ.வ.கூ.ச தெல்லிப்பளை) சௌத்தரராசா (தபாலகம்-தெல்லிப்பளை), விஜயராசா(சவுதி), சுகுணா, சீதா சத்தியநாயகி (யா/போக் கட்டி அ.த.க.பா ஆசிரியர்), ரகுராசா (சவுதி), துசியந்தராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கருணாநிதி (சாரதி சீமெந்துக் கூ.தா), ராஜசுலோசனா, உமாவதி, சறோஜாதேவி, விஜயகுமார், சிவகுமார் (ஆசிரியர்-கிளி/ விநாசியோடை அ.த.க.பா), விஜிதவேணி, ஸ்ரீ முகுந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுமலினி ( ஆசிரியர்-யா/ குட்டியப்புலம் அ.த.க.பா), துளசிராஜன், றோகினி (ஆசிரியர்-மன்/நானாட்டான் ம.ம.வி), பிரபு, சௌந்தரியா, வித்தியாசாகரன், தேவகி, தனேஸ் (தபாலகம்-தெல்லிப்பளை), ஜானகி (பல்கலைக் கழகம் மட்டக்களப்பு), புஸ்பகாந்தி, முகுந்தன் (டோகா), பிரகாஸ் ( பிரான்ஸ்), ரமணன் (தொழில்நுட்பக் கல்லூரி), வசந்தன், விஷால், வேந்தன், ஆர்த்தி, சுஜிந்தன், ஆகாஷ், சுருதி, திவ்வியன், தனுஸ், வர்ஜா, வைஸ்ணவி, ஸ்ரீராம் மற்றும் விக்கினேஸ்வரன் (முகாமையாளர்-சமுர்த்தி வங்கி), கோமளா (ஆசிரியர்-மு/கொக்கிளாய் அ.த.க.பா), றஞ்ஜித், ஜோன்சன், பத்மினி, சசிகுமார், ஜஸ்மின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நீதிமன்ற வீதி மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று 12.01.2014 ஞாயிற்றுக் கிழமை பகல் 12 மணிக்கு பூதவுடல் அளவெட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம். (சீ-6164)

தகவல்: குடும்பத்தினர்
0775001404, 0776315915

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க முயற்சி...

இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் தம்மால் மேற்கொளளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் எவ்வித விசாரணைகளையும் அமெரிக்கா மேற்கொள்ளாத நிலையில், இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் அந்நாடு எதற்காக கரிசனை எடுக்கிறது என்பதை உண்மையில் புரிந்து கொள்ள முடியவில்லை.

கடந்த திங்கட்கிழமை ஸ்ரீபன் ராப்பையும், அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் சிசனையும் சந்தித்த போது, மேற்கத்தேய நாடுகளின் இந்த இரட்டை முகம் குறித்து எடுத்துக் கூறியிருந்தேன். லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கேணல் கடாபி கைது செய்யப்பட்ட பின்னர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதையும் அவர்களிடம் நினைவுபடுத்தியிருந்தேன்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேறகொள்ளப்பட்ட மனிதாபிமான நட்வடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை மனிதாபிமானப் பணியகத்தின் அறிக்கைகள் ஊடாக தெரிந்து கொள்ளலாம்.

அமெரிக்க அதிகாரிகள் சிலர் இங்குள்ள களநிலைவரங்கள் தொடர்பில் எதுவும் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர். தீவிரவாதத் துக்கு எதிரான அமெரிக்காவின் போருக்கு இலங்கை அரசாங்கமும் ஒத்துழைப்புக்களை வழங்கியது என்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேபோன்று படைத்தரப்பினரின் பீரங்கித் தாக்குதலில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட இடம் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அடையாளப் படுத்தியமை முற்றிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று படைத்தரப்பும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. நிபுணர் குழு, சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் மற்றும் சனல் 4 தொலைக்காட்சி ஆகியன வெளியிட்டிருந்த ஆதாரங்கள் போலியானவையெனஅரசாங்கம் தொடர்ந்து மறுத்து வருகின்றமை தெரிந்ததே. (எ-11)

# கூலர் வாகனம் - தனியார்...

மோதி விபத்துக்குள்ளானதில் 12 பேர் படுகாயமடைந்ததோடு இருவாகனமும்பலத்த சேதத்துக்கு உள்ளானது.

இச்சம்பவம்நேற்று பற்பகல் 3 மணியளவில் வடமராட்சி வல்லை மண்டான் முச்சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இதில் பேருந்தில் பயணம் செய்த துன்னாலை வடக்கை சேர்ந்த இராசரத்தினம் விஜிதா (வயது 33), அல்வாய் வடகை சேர்ந்த ஜெனகன் கிருசாந்தி (வயது 29), அல்வாய்வடக்கை சேர்ந்த நவினை சுதர்சினி (வயது 29), வதிரியைச் சேர்ந்த நாகராஜா மல்லிகா தேவி (வயது 50), கொற்றாவற்றையை சேர்ந்த தங்கராஜா சுகிர்தன் (வயது 30), பருத்தித் துறை சுப்பர் மடத்தினை சேர்ந்த அமுதலிங்கம் அனோஜன் (வயது 22), தம்பசிட்டியை சேர்ந்த கார்த்திகேசு சுப்பிரமணி (வயது 70) ஆகியோர் காயமடைந்து பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கொற்றா வற்றையை சேர்ந்த தங்கராசா அமன்னா (வயது 26) மானிப்பாயை சேர்ந்த கூலர் சாரதியான கணபதிப்பிள்ளை தயாபரன் (வயது 43) ஆகிய இருவரும பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய மூவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

இது தொடர் பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-10,11,23,24,60)

# அமெரிக்காவின் ...

டும்எனவும்அவர்தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் சம்பவங்கள் இன்றும் எம் கண் முன்னே இருக்கின்றது. இதே போன்று இதற்குப் பின்னரான தற்போதைய நிலையிலும் எத்தனையோ பல துன்பங்களும் துயரங்களும் நடந்துள்ளது நடந்து கொண்டே தான் இருககின்றது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்காகவும் தமிழின விடுதலைக்காகவும் அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட பல இலட்சக்கணக்கானோரை நாம் இழந்திருக்கின்றோம். அத்தோடு அந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட துன்பங்கள் துயரங்கள் எமது மககளை எந்தள விற்குப் பாதித்திருக்கின்றது. எத் தகைய அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதனை இன் றைய நிலையில் பார்க்கக் கூடிய தாக உள்ளது.

இந்த நாட்டின் ஆட்சியிலிருக் கின்ற அரசாங்கங்கள் இவ்வாறு படுகொலை செய்தும் பல ஆயிரக கணக்கானோரை கடத்தியும் இருககின்றது என இன்று அரசிற்கு எதிராக போர்க் குற்றம் சுமத்தப்பட்டு அதனை விசாரிக்கப பட வேண்டுமென சர்வதேசத்திலேயே வலு வானதொரு கோரிக்கை விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது இம் முறைநடைபெறவுள்ள மனித உரிமை கூட்டத் தொடரிலும் இங்கு இடம்பெற்ற போர்க்குற்றத்திற்கு எதிராக சர்வதேச விசாரணையை கோரு கின்றோம். இங்கு இலட்சக்கணக்கான மக்கள்கொல்லப்பட்டார்கள் பல ஆயிரக் கணக்கானோர் காணாமல் போயுள்ளார்கள். இதற்கான பதிலை அரசாங்கமே சொல்ல வேண்டும். இங்கு இடம்பெற்றதற்கு எதிரான உணமைகள் வெளிக் கொண்டு வரப்பட வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாகவேஇருக்கின்றோம்.

குறிப்பாக நாங்கள் ஏற்கெனவே அறிவித்தது போன்று ஜெனிவாவில் இம் முறையும் கொண்டு வரப்படவுள்ள அந்தப் பிரேரணை வெற்றி பெறுவதற்கு ஆதரவு வழங்கவேண்டும் என சர்வதேச நாடுகளை கோரி வருகினறோம். அந்தப் பிரேரணைக்காக நாம் தொடர்ந்தும் சர்வதேச ரீதியாக உழைப்போம் என்றார். (எ-6)

# புலிகளுக்கு உத...

சாதனங்கள் போன்றனவற்றை புலிகள் பயன்படுத்தியுள்ளனர்.

30 ஆண்டுகள்பிரபாகரன்செய்த போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் அமெரிக்கா கேள்வி எழுப்பத் தவறியுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

விஸ்வநாதன் உருத்திரகுமாரன்மற்றும் அடேல் பாலசிங்கம் ஆகியோருக்கு அரசியல் புகலிடம் வழ்ங்கப்பட்டுள்ளதாகவும், இது பாரிய குற்றம் எனவும் அரசு கூறியுள்ளது. (எ-11)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள். 077 908 6737
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.
இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

விற்பனையாகிறது
தரம் 5 புலமைப்பரிசில்
மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக
கணித விவேக வழிகாட்டி
ஆக்கம் : I.L.M.ஸபான்
அடிப்படைத் தமிழ் வழிகாட்டி
ஆக்கம் : M.சுகந்தன்
சுற்றாடல் சங்கமம்
ஆக்கம் : S.சுதர்சன்
கட்டுரை சங்கமம்
ஆக்கம் : M.சுகந்தன்

வெற்றிக்கு வழிகாட்டி மாதிரி வினாத்தாள்
தரம் 1 முதல் 5 வரை
(C-6157) எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
தொ.பே : 011 4014438 / 077 6258778

## மரண அறிவித்தல்



மலர்வு
19
02
1932

உதிர்வு
09
01
2014

அமரர்
## கணபதிப்பிள்ளை சிவகுரு
[தமிழ்ப்பூங்கா ஸ்தாபகர்]

அமரர் கணபதிப்பிள்ளை லட்சுமி அவர்களின் அன்புமகனும் வள்ளியம்மையின் அன்புக்கணவரும், அமரர் வேலாயுதம், செல்லம்மா அவர்களின் சகோதரனும் பூபாலசிங்கம், சிவானந்தம், கணேஷலிங்கம், நந்தகோபால், வடிவேல், வனிதா, பகீரதி, சிவபூங்கா, சிவநாதன், அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தேவகி, பரிமளா, மனோரஞ்சிதமலர், நக்கீரன், சுமதி, இராஜகுமாரி, நந்தினி, பிரியா ஆகியோரின் மாமனாரும் மனோன்மணியின் மைத்துனரும் கோபி, சோபனா, நிதுர்சன், சோமினி, ஆகாஷ், மதீனா, விகாஷ், கவிஸ், சஜீவன், சாயினி, சுவேதிகா, அபிகாசினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் மணிவேந்தன், மணிவண்ணன், மதிவதனி, மதிவாணி ஆகியோரின் பெரியப்பாவும் மகேந்திரன், சுரேந்திரன், மணிமொழி, மணிமலர், அமுதா, சத்தியேந்திரன் ஆகியோரின் தாய் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 12.01.2014 அன்று 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

(C-6162)



## அந்தியேட்டி சபீண்டீகரண அழைப்பு

கடந்த 13.12.2013 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குலதெய்வம்

அமரர்
### விநாயகமூர்த்தி மங்களாம்பிகை (தேவி)


அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 12.01.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் மாவிட்டபுரம் கீரிமலை ஆலயத்தில் நடைபெறும். அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரிலும், அஞ்சலியிலும், தொலைபேசியிலும் இரங்கலை தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தங்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- நன்றி -

கற்கோவளம்
பருத்தித்துறை

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-6125)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

திரு. சிறிரங்கன் பிரசாத்

இன்று யாழ் பல்கலைக் கழகத்தில் இடம்பெறும் 29ஆவது பட்டமளிப்பு விழாவில் 2013 - கலைமாணி BA (Hons), Pol.Sc பட்டம் பெறும்

### திரு. சிறிரங்கன் பிரசாத்

(பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவன், யாழ்.பல்கலைக்கழக அரசியல் துறை உதவி விரிவுரையாளர்)

அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: சசி அத்தான், பவா அக்கா, பிள்ளைகள்

(C-6160)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org